ஓ

கடவுள் துணை.

சிவநாமகீர்த்தனங்கள்

பதங்கள்.

இவை

சிதம்பரம்-சங்கீதசாகரம்

மு. கிருஷ்ணசாஸ்த்திரியாரால்

இராகதாளம் அமைப்பித்து

புதுவை-இராமசாமிநாயகரது

முயற்சியால்

காஞ்சீபுரம்.

வீராசாமிமுதலியார்-குமாரர்

திருவேங்கடமுதலியாரது

இயற்றமிழ்விளக்கவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பவளர் பங்குலிபீ,

96.

சிவமயம்.

சிவநாடகீர்த்தனங்கள்.

விநாயகர்—காப்பு.

வெண்பா.

சிந்தாகுலந்திருஞ செய்கருமங்கைகூடுங்
சந்தானமென்றுந் தழைத்தேறும்—பைந்தாமத்
தானைவயத்தானை மலைப்பாவையளித்தானைமகத்
தானைமுகத்தானை நினைத்தால்.

இராகம்-உசானி சாபுதாளம்.

பல்லவி.

என்னபுண்ணியஞ்செய்தாயோ
நெஞ்சமே நீதான் என்ன

அநுபல்லவி.

மூன்னமில்லாவன்பு மூளைத்துபோரூரிலேசென்று
முருகா-முருகா-முருகா எனவாழ்த்தவே என்ன

சரணங்கள்.

மூட்வன்வாயிற் கொம்புத்தேன் மனமே
மூந்தியொழுகினற்போல்
அட்லவேலண்ணலருள் அடையும்நிலைபெற்றுயே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றுயே என்ன

குருடன்கண்பெற்றுற்போல மனமே
குமரவேள் அருள்பெற்றுன்
அருகிலெமன்வராத ஆண்மைபும்பெற்றுயே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றார் என்ன

கரமில்லாதவன்கடல் மன்மே
கடக்குமுறைமைபோலே
அரியபிறப்பினைவிட டகலும்நெறிபெற்றுயே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றார் என்ன

மலடிபிள்ளைபெற்றார்போல் மனமே
வழுவாதுகொண்டுசெய்து
அலசுமவினையின்னமும் அணுகாவகைபெற்றுயே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றார் என்ன

பட்டமரத்துளிர்த்த மனமே
பான்மைபோலருள்ளே
அட்டமாசித்தியும்பெற அருகணுப்நின்றுயே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றார் என்ன

கல்லிலேநாரிருக்க மனமே
கண்டாற்போலேகருதி
அல்லாவுன்னையும் ஐயனடிமையாகக்கொண்டானே
ஆரே-ஆரே-ஆரே இப்படிப்பெற்றார் என்ன

இராகம்-கமாசு-எகதாளம்.

பல்லவி.

குமரகுருபரசரவணபவசுர குஞ்சரிமணாளசரணம்
வள்ளி ரஞ்சிதமணாளசரணம்

அநுபல்லவி.

சமரபுரிதனில் அமர்தொழுகிழ்
சடாக்ஷரப் பொருளேசரணம்-என்னைக்
கடாக்ஷித்தருள் வாய்சரணம் குமர

சரணங்கள்.

சிவனுமகிழ்தர ஒருசொலருளிய
செந்திள்நக ராளீசரணம்-என்முன்
வந்தருள்செய்வாய் சரணம் குமர
தவமுனிவரெரும் புகழுறைதிருச்
சாமிமலைபானே சரணம்-சிவ
காமிபநுள் பாலாசரணம் குமர

அசுரர்குலமுழுது மடிய அயிலைவிடும்
ஆவினன்குடி- யாய்சரணம்-இந்தப்
பாவியையாண்டருள் வாய்சரணம் குமர

பசியதுளவணி அரிதிருமருகனே
பழனிமலை யானேசரணம்-அன்பர்கள்
பிழைகள்பொருப் பானேசரணம் குமர

துயிதந்லிவிடுமவர்கள் தொழவருள்
சோலைமலை யானேசரணம்-பெரு
வேலையுடையானே சரணம் குமர

குயியுமுலையவர் மயலைநான்விடவருள்
குன்றுதோ றுடிசரணம்-என்முன்
நின்றருள்செய் வாய்சரணம் குமர

பதம்.

இராகம்-இந்துஸ்தானி-காபி சாபுதாளம்.

பல்லவி.

இத்தனைநிஷ்டூரமேது சாமி
என்மேல்சொல்லஆகாது இந்த

அநுபல்லவி.

பத்தர்கிதந்தொழுது பரவுந்திருப்போரூர்ப்
பன்னிருகையமோ என்னுயிர்க்கையமோ இத்த

சரணங்கள்.

ஆசையில்லாமலும்மை அகன்றப்புறம்நின்றேனு
வாசவெள்ளிலைச்சுருள் மடித்துநாமென்றேனு
வேசிபோலும்மைவிட்டு வெளிபிலேசென்றேனு
காசுபணம்மொக்கமாய்க் கைமேல்போடுமென்றேனு இத்

கோபிலுள்ளசொத்தைபெல்லாங்
கொண்டுவச்சொன்னதுண்டோ
வாபித்தம்பலத்தைதானா
வாங்கமாட்டேனென்றதுண்டோ
தாயின்வார்த்தைகேட்டுமக்குத்
தடங்கல்செய்ததுண்டோ
பாயலில்படுக்காமல
பாசாங்குகள்சொன்னதுண்டோ இத்த

சித்தம்ஒருகியும்மைச் சேராதிருந்தாலுண்டோ
முத்தம்கொடுக்கும்போது முகந்திருப்பினதுண்டோ
குத்துமுலைதொடாமல கூடுமென்றுசொன்னதுண்டோ
நத்தமூக்குத்தவேண்டி மென்றுநான்கேட்டதுண்டோ இத்

பொட்டைத்திருத்திக்கொண்டு போனபோதேதெரியும்
நிட்டூரஞ்சொல்லித்தானே நீங்கபோகவேண்டும்
நாட்டமில்லையொன்றும் நாணயமிருக்கவேண்டும
ஜோட்டமாம்வேலரா இந்தமட்டில்போதும் இத்

வேதகிரீசர்கீர்த்தனர்.

இராகம்-பரவி-சாபுதாளம்.

பல்லவி.

அடியார்களுத்தொண்டுசெய்யத் தேடி மனமே
ஆதிவேதகிரீசர் வீடி

அநுபல்லவி

படிமேற்றவம்புரிந்து பாடுபடலேவேண்டாம்
பத்தியுடன்வேதகிரிக் கத்தனிக்கம்பணியும் அடி

சரணங்கள்.

இவுமுனர்தொண்டருக்குத் திருவோடுதானளித்த
நிருநீலகண்டர்பெற்ற செல்வங்கொஞ்சுமோகூறு
பூமகவிறன்மிண்டர் அன்பரிடத்துவைத்த
பத்தினியைப்பார்த்தாகிலும் பரிவாகநீதேறு
சுவலமில்லாமல்அமர் நீதிகோவணமூடை
தந்தந்தவுட்லோடோ சார்ந்தாரேபெரும்பேறு

கவலையென்வெகு சூசுகவழியிது
கையில்நெல்லிக்கனி போலேதருவது அடி

தொண்டர்குறிப்பறிந்து தூசுவெளுத்தளித்த
தொண்டர்பெற்றபேறு சொற்பமோநீசொல்லு
புண்டுநாவுக்கரசைப் பணிந்துமெத்தொண்டுசெய்த
பத்தர்அப்பூசலையைப் பார்த்தந்தவழிலிலு
கொண்டமனவிசையைத் தடிந்தகலிக்கம்பனர்
கொள்கையைக்கண்டந்த நெறியிலில்நீசெல்லு

அண்டமெல்லாம்அவர் காற்கிழக்கிடக்குமே
அவர்நினைத்தபடி யெல்லாம்நடக்குமே அடி

பெருக்கமாஞ்சுந்தரர் மனதினிற்றியானித்துப்
பெருமிழலைக்குறும்பர் அடைந்தாட்டமோசித்தி
பொருத்தமார்திருஞான் சம்பந்தரைத்தினமும்
போற்றிக்கணநாதனர் எய்திலர்பரமுத்தி
உருக்கமாயின்னஞ்சொல்வேன் சுந்தரர்க்குவேதவரி
யொருவருமிப்படியே சொன்னாரிம்மலலடித்தி

திருத்தொண்டத்தொகை நமக்கிப்போதுசாக்ஷி
திரும்பச்சொல்லவேணுமோ வேறேரத்தர்க்ஷி அதி

திருஞானசம்பந்தசுவாமிகள்பேரில்-கீர்த்தனம்

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுமாத்திரஞ்செய்நீ மன்மே-லுன்னீ
இமையோரும்போற்றி செய்வார்தினமே

அநுபல்லவி.

மதுமலர்ச்சோலைசூழுங் காழிநகரில்வாழும்
மன்னவர்ஞானசம்பந்தர்தன்னோவாழ்த்தென்றுசொன்ன இது

சரணங்கள்.

சிவபாதவிருதயர் மைந்தராயவதரித்துத்
தேவியார்தந்தஞானப்பா லுண்டிறையைத்தரிசித்து
நவமாந்தோடுடைய வெனும்பதிகம்விரித்து
நாடுந்தாளங்கோலக்கா நாதனுற்கையிற்பரித்துப்

பவமகற்றுந்திரு அரத்துறையினின்முத்துப்
பல்லக்குச்சிவ னுர்தரக்களித்தருத்
தவங்கொள்பாச்சிலிலோர் கன்னிநோயொழித்த
சைவக்கன்றைத்துதி செய்வாயென்றுரைத்த இது

கொங்கிற்சுரந்தீர்த்தமுத்துப் பந்தர்பட்டீசர்கொடுக்கக்
கொண்டுலவாக்கிழிபெற்று யாழ்ப்பாணர்வந்தடுக்கப்
பொங்கமாய்மகிழ்ந்தமரு கலில்விஷத்தைக்கெடுக்கப்
பொருவில்பதிகஞ்சொல்லிப்படிக்காசெய்தியடைக்கத்

தங்கியதிருக்கத வங்களேப்பாடிமுன்னர்
சார்ந்திமமணர்கள் வாதுடனேதுன்ன
மங்குறும்படிவெல்லு மவர்தமையடுத்தின்னம்
வணங்குநீமகிழ்வென்ன இணங்கியேசான்சொன்ன இது

தென்னவன்சுரமாற்பிட நீற்றப்பதிகங்கூறித்
தீயிலேயிட்டெடுத்தங் காற்றிலுமவிட்டுத்தேறி
அன்னவன்கூன்நிர்த்தங்கோர் ஓடந்தன்னிலேறி
யரும்புமாண்பனைகாய்க்கத் திருவளத்தன்பூரி

துன்னியமயிலேயி — லெலும்பைப்பெண்ணாக்கண்ட
தாயவர்மணத்தினி — ன்றைபுதமலரன்ட
வன்னப்பதிகம்நல் — லாயதனுல்லின்ட
மன்னேத்துதியென — வன்னோருன்வேண்டிக்கொண்ட இது

திருவொற்றியூர்த்தியாகராசர்

கீர்த்தனம்.

இராகம்-சுருட்டி சாபுதாளம்.

பல்லவி.

இந்தவிதியுமக்கே — தையா-தோலும்
எலுமபுமலங்கரிது — பொய்யா

அநுபல்லவி.

செந்திருமேவிய — ஆதிபுரியில்வாழும்
தியாகராசன்றி — பேர்பெரிதாயிருந்தும் இந்த

சரணங்கள்.

பொன்மலைவெள்ளிமலை — யிருக்குதே-யார்க்கும்
பூசிதமதகமா — யிருக்குதே
துன்னுங்குபேரன்சினேக — மிருக்குதே- ரசவாதத்
தொழிலும்நன்றுய்த்தெரிந் — திருக்குதே-இவையிருந்தும்

மன்னுமூரொற்றியாச்சே — வாழிடம்புற்றுய்ப்போச்சே
அன்னம்தேடவு மாச்சே — அந்தமில்லாமற போச்சே இந்த

உழவுத்தொழிலுக்கெரு — திருக்குதே-நிலம்
எல்லாமுமதாகவே — யிருக்குதே
எழுதுந்தொழிலுந்தெரிந் — திருக்குதே-தூது
ஏகிப்பேசுந்திறமை — யிருக்குதே-எல்லாமிருந்தும்

வழக்கம்பேயுடனுச்சே — மதியுங்குறைந்துபோச்சே
ஒழுக்கந்தெரியலாச்சே — உண்பதுவிஷமாய்ப்போச்சே இந்த

எல்லாந்தருமவடிவா — ளிருக்கவும்-மகன்
இளையவன்திறமையா — யிருக்கவும்
நலலஅடிமைகளு — மிருக்கவும்-திரு
நாயகன்மைத்துனனு — யிருக்கவும்- தலையோடேந்தி

மெலலவிரக்கலாச்சே — வீருப்பெல்லாம்போச்சே
பலலைத்திறக்கலாச்சே — பழிப்புக்கிடமாய்ப்போச்சே இந்த

சபாநாதர்கீர்த்தனம்.

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடினதேனையா குதித்துக்
கூத்தாடினதேனையா.

அநுபல்லவி.

தேடியெமைமாட்சிக்குஞ் சிவகாமிநாதரோ
திகுர்ததிதித்தோந்தித்தோமெனச்சிதம்பரத்தினீர் ஆடின

சரணங்கள்.

தாயனுகமரினி லுருத்தமாம்பிஞ்சுதின்ற
சந்தோஷமதனுலோ
நேயமுனிளைசை மாமரர்விருந்துசெய்த
நீலமைமகண்டதினுலோ

வாயினுல்நுகிகண்டு கண்ணப்பரிறைச்சியைய
மகிழ்ந்தூட்டுமதினுலோ அன்டையாராய்த்
தூயசிறுத்தொண்டனுர் பிள்ளைக்கறிசமைத்த
தொந்தங்கண்டதினுலோ எந்தவகையினுலோ ஆடின

மூர்த்தியாருனைத்துத் தருஞ்செஞ்சந்தனமூடல்
முழுதும்பூசினத்தாலோ
சீர்த்திபெறுமுருகர் தொடுத்தபூமாலைகளை
செம்மையாய்ச்சூடினத்தாலோ

பூர்த்தியாகியவன்பால் கலயனரிடமந்தப்
புகையின்மனத்தினுலோ யாவர்களும்
பார்க்குந்தீபம்பன்னுரும் ஏத்துங்கலியரன்பின்
பான்மைகண்டதினுலோ மேன்மையென்பதினுலோ ஆடின

சம்பந்தருடனப்பர் சுந்தரர்பாடும்பண்ணின்
சந்தங்கேட்டதினுலோ
வம்பில்சேரமான்சொன்ன பிரபர்தமுன்றையும்
வகையாய்க்கேட்டதினுலோ ஐயடிகள்சொல்
பம்பும்வெண்பாக்கேட்டு பான்மையினுலோவன்பர்
பரியுஞ்சபையில்யார்க்குந் தெரியும்படிமகிழ்வாய் ஆடின

திருக்கச்சூர்த்தினம் விருந்திட்டநாதர்-கீர்த்தனம்.

ஜாகம்-சாவேரி-சாபுதாளம்.

பல்லவி.

நான்சொல்லுஞ்செல்லுநீ நம்பு மன்னே
நடலைவாழ்வெல்லாம்வீண் வம்பு

அநுபல்லவி.

தேன்சொல்மாதராசையிற் சிக்கிக்கொண்டழியாதே
திருக்கச்சூரிறைபதத் திருக்குமன்பொழியாதே நான்

சரணங்கள்.

மூர்த்தியாரிந்தவாழ் விஞ்சிலன்புசேர்த்தார்
முழுதுமுணரப்பர்தான் பெரிதாகப்பார்த்தார்
பார்த்திபர்ஐயடிகள் பார்தன்னைக்காத்தார்
பத்தினியைக்கொடுக்க இயம்புகைவேர்த்தார
ஏத்துகலயர்தாலி யினைமறைத்திட்டார
எரியினில்விழப்புகழ்ச் சோழர்பின்னிட்டார நான்

சேரமானிந்தவாழ்விற் சிந்தைவைத்திருந்தார்
சிறுத்தொண்டர்பிள்ளையென் றெண்ணியேபரிந்தார
சாரெறிபத்தர்யானை தனைக்கொல்லப்பயந்தார
சமுசாரம்தனையெண்ணி யினைசைமாறர்நொந்தார்
நேருந்தாய்னர்தம தடலைப்பூசித்தார
நினைக்குங்கலியர்தம துயிரைநீசித்தார நான்

அன்பர்கோட்புலியார்தங் கிளைஞரையொருத்தரே
அருமைமனைவிகையைக் கலிக்கம்பரிறுத்தரே
முன்புகஞ்சாறர்மகள் கூந்தலையறுத்தரே
முன்னியகுறுமபரு முலகினைவெறுத்தரே
இன்பமாகவேயிந்த வாழ்வினைக்குறியாதே
யெந்நாளுந்திருக்கச்சூர் இறைதாள்நீபிறியாதே நான்

ஜாகம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

அரகரசிவசிவ - திரிபுரதகனு - ஆதரித்தருள்-என்னையே

அநுபல்லவி.

வரகதிசேகர பரமகிருபாகர
வான்மிபூர்வாச பிரகாசகைலாச அரகர

சரணங்கள்.

சீதரமாதவசேவிதசரணா சிதளசந்திரசடர்தாரிபணா
பூதிபிரசாதவிநோதவிதரணா பொங்கமிகுந்திடும்
அங்க ஆபரணா அரகர

பாசவிமோசன பரசிவநாமா பன்னகபூஷண உன்னரி
தசோமா - காசிநிவாசசுகுதிப நேமா
கந்தரிகுந்தரி அந்தரி வாடா அரகர

அம்பரவம்பரஆதரபூகா அனவரதநட்டனமிகுமிரு
பாதா - சம்புசயம்புசதாசிவ போதா
சாலவிசாலபுயாசல நீதா அரகர

ஆரணகாரணவிரவிதேகா ஆகமபூசிதபாதஅனேகா
பூரணவான்மியூர்வாழுமமோகா - புங்கவர்சங்கமகங்
கணநாகா அரகர

இராகம்-கர்நடா-ஆதிதாளம்.

பல்லவி.

மருந்தீசர்நீரே-திருவான்மியூர்- மருந்தீசர்நீரே

அநுபல்லவி.

மருந்தீசர்நீரே மாதவர்க்கருள்வீர்நீரே
திருந்துமனத்தன்பர்கள் சேவிக்கும்பாதர்நீரே மருந்

சரணங்கள்.

அம்புலிச்சடையீர்நீரே அடும்பிலியுடையீர்நீரே
சிம்புளுருவானீர் நீரே செப்புந்தூதுபோனீர்நீரே மரு

மண்சுமந்தீர் நீரே வானமுங்கடந்தீர்நீரே
பெண்ணிடங்கொண்டீர்நீரே பெறுந்தசையுண்டீர்நீரே மரு

மன்றினில்நடித்தீர் நீரே மலைவில்லெடுத்தீர்நீரே
மின்றிகழுருவீர் நீரே விடைமேல்வருவீர்நீரே மரு

மாஞ்ருகரத்தீர் நீரே வழங்குகும்பரத்தீர்நீரே
மோனத்திலமர்ந்தீர்நீரே முதல்நடுவிறில்லீர்நீரே மரு

இராகம்-உசாணி, ரூபகதாளம்.

பல்லவி.

வேறொன்றும்பேசாதே - நெஞ்சே - நீ

அநுபல்லவி.

தேறிச்சிவாவென்றுபேசத் தெரியாவிட்டாலுமது
சேரும்சொல்லேதாகிலு - நீ செப்புவாயல்லாமல் வேறே

சரணங்கள்.

வீரசிவாசியென்றும் வஞ்சிவஞ்சியென்றுப்பேசு
பேசிவாவென்றும்பெரும் பிச்சிவாவென்றும்பேசு
கூசிவாவென்றுமிகக் கொஞ்சிவாவென்றுப்பேசு
தேசிவாவென்றுமுயர் சேணிச்சிவாவென்றும்பேசு வே

காசிவாவென்றும்பெரு கச்சிவாவென்றும்பேசு
பூசிவாவென்றும்பெரும் பூச்சிவர்வென்றும்பேசு
ஏசிவாவென்றுமொரு இடைச்சிவாவென்றும்பேசு
நேசிவாவென்றுமொரு நீச்சிவாவென்றும்பேசு வே

தாசிவாவென்றுமொரு சடைச்சிவாவென்றும்பேசு
மாசிவாவென்றும்விசு வலைச்சிவாவென்றுப்பேசு
தூசிவாவென்றுமொரு தொந்திச்சிவாவென்றும்பேசு
மூசிவாவென்றுமொரு மோனச்சிவாவென்றுப்பேசு வே

மாலுமயனும்போற்றும் வான்மியூரிலெந்நாளும்
சிலமுடன்வாழ்மருந்திசர் சேவடிநீவாழ்த்தி
ஆலமுண்புகழ்பேசு ஆனந்தனிலேபேசு
சூலமதனைப்பேசு தாலசுக்குமம்பேசு

இராகம்-நாயகி-சாபுதாளம்.

பல்லவி.

கடைக்கண்திறந்து - சற்றேபாரும் - மருந்திசரே

அநுபல்லவி.

அடைக்கலமெனவந் தேனே
அபயமெனநொந் தேனே - கடை

சரணங்கள்.

நிலைத்தபசியால் வாடி நெஞ்சிற்பொருளோடி
உலுத்தர்தங்களைப்பாடி ஒழியாதபாவந்தேடிக்
கொண்டேனே - உம்மைக் - கண்டேனே-கடை

மூன்றைவினையால் வந்து மூளும்பிறப்பால்நொந்து
சிந்தைமிகவே நொந்து செயலெல்லாமுமழிந்து
சோர்ந்தேனே - யும்மைச் - சார்ந்தேனே - கடை

மாதர்மேல்மனம் வைத்து மாயன்கணைகளைத்தைத்து
போதமெல்லாம் நசித்து புன்மையதிகரித்து
கனைத்தேனே - மிக - இளைத்தேனே - கடை

கூற்றன்வருவானென்றுன் குரைகழல்தஞ்சமென்று
போற்றியடைந்தேனேயின்று பூகாரதோன்று
வாழ்குவேன்- உன்கோயில்-சூழ்குவென்-கடை

இராகம்-தேவமனோஹரி- ஆதிதாளம்.

பல்லவி.

ஆருக்குக்கிடைக்கும் இந்தமருந்து
ஆருக்குக்கிடைக்கும்

அநுபல்லவி.

சிரிக்கெல்லாமொரு சிரிடமாகிய
திருவான்மியூரினில் வருவாருக்கல்லாமல் ஆரு

சரணங்கள்.

ஆசபாசத்தையெல்லாம் சிதியெனவிட்டுமூன்
பூசாபலத்தினுலே தேசோன்மயமாகிய
தாசோகம்பாவித்து மாசோகந்தவிர்த்து

நேசாலூதிகொண்டு
பேசாதிருப்பார்க்கல்லால் ஆரு

சத்தசத்துத்தேரிந்த முத்தாக்கண்டுமிகு
பத்திரிதழுஞ்செய்து சித்தசுத்திக்கிடைத்து
தத்துவத்தையொழித்துப் புத்தியுமொருமித்து

வஸ்துநிலைதெரிந்த
உத்தமர்க்கல்லாமல ஆரு

பிறப்புமிறப்பும்விட மறப்பும்நினைப்பும்விட்டு
பிறிக்கும்பொருளையங்கே நெறிப்புடனேபிறித்து
திறக்கும்வழியதனைக் குறிப்புடனேதிறந்து

வெறிக்குமனக்குரங்கை
நிறுத்துமொருத்தர்க்கல்லால் ஆரு

ஓட்டைமாடத்திருந்து மூட்டைக்கட்டிக்கொள்ளாமல்
காட்டுமருந்தைக்கொண்டு வீட்டினுவழியறிந்து
சேட்டைசெயுமைவர்கள் கூட்டுறவைப்பிரிந்து

பூட்டைத்திறந்துபார்க்கும்
நாட்டமுள்ளவர்க்கல்லால் ஆரு

இராகம்-சுருட்டிமலார்-சாபுதாளம்.

பல்லவி.

வாவாவென்பாயோ ஏன்னையும்
வலிந்தாட்கொள்வாயோ

அநுபல்லவி.

தேவாதேவர்கள் தேவாவான்மியூர்க்
செல்வாலருமூறை திருவாய்மலர்ந்துநீ வாவா

சரணங்கள்.

கன்னேகண்மணியே மூக்கண்
கரும்பேயதன்ரசமே
புண்ணேபுண்ணிசையே முதிரும்
பழமேபழரசமே
பெண்ணே ஆணே ஆலியோகான்வரு
பித்தா-சுத்தா-சித்தா-அத்தா வாவா

பொன்னேபொன்னொளியே மலர்
பூவேபூமணமே பெரு
மண்ணேமாமுறையே கவ
மணியேமணியொளியே
முன்னேபின்னே-நடுவோ ஏனவரு
முதியாய்-மதியாய்-நதியாய்-கதியாய் வாவா

தேனேதென்சுவையே உனவுணத்
தெவிட்டாத தெள்ளமுதே
ஊனேஉள்ளுயிரே உயிருக்
குயிரேஉறுதுணையே
வானோர்கோனே தீநேர்தருமணி
வண்ணை-தண்ணர்-கண்ணை-அண்ணை வாவா

இராகம்-அடாணை-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதாகிலுஞ்சொன்னேனை என்சாமியை

அநுபல்லவி.

பாதாரவிந்தங்கள் பணிந்தவான்மியூரினில்
பாடித்துதிப்பதல்லால் ஓகடியமாகான் ஏதாகி

வைச்சவேர்ட்டையப — கரிச்சுக்கொண்டதும்மன்றி
வழக்கிட்டுவெளியினில் — இழுத்தடிச்சாரொன்றேன்
கச்சூரிலேயன்னம் — பிச்சையெடுத்தாரென்றேன்
கள்ளரைவிட்டுப்பொருள் — கொள்ளையடிச்சாரென்றேன்
பிச்சேறினவரென்றேன் — லச்சைகெட்டவரென்றேன்
மச்சம்பிடிச்சாரென்றேன் — எச்சலுமுண்டாரென்றேன் வேதே

ஏதாகிலும்

தோலுமெலும்புந்தும்பும் — மேலேயணிந்தாரென்றேன்
சுடுகாடுதன்னிறபேய்க — ளுடனேயாடுவரென்றேன்
காலுங்கையுமுடம் — போலேயிருக்குமென்றேன்
காட்டுப்புலியுடனே — கூட்டுறவுகொண்டாரென்றேன்
ஓலமிட்டாரென்றேன் — மேலடிபட்டாரென்றேன்
சீலம்விட்டாரென்றேன் — காலங்கெட்டாரென்றேன் வேதே

வெறொன்

பொய்யோலைகாட்டிச் சபையில்
மெய்போல் சாதித்தாரென்றேன்
புண்டபிட்டுக்காகமண்
டிண்டிச்சுமந்தாரென்றேன்
நெய்யுங்கோவணக்களவு
செய்யுந்திருடரென்றேன்
நீசனுய்ச்சேர்மாசிமாறர்
வாசலிற்சென்றரென்றேன்
தையல்முன்கூத்தாடியென்றேன்
வையகமாற்றுழியென்றேன்
செய்யும்போர்தோற்றோடியென்றேன்
அய்யமேற்கப்பாடியென்றேன் வேதே

ஏதாகிலும்

இரீகம - பியாக - சாபுதாளம்.

தியானஞ்செய்மனமே - எப்போதும் - நீ

அநுபல்லவி.

தியானஞ்செய்திருவான்மி — பூர்ம்ருந்தீசனைச்
சனனமரணதுக்கந் — தீர்ந்துகதிபெறவே தியா

சரணங்கள்.

கோம்பிலுமரத்திலுங் — குதித்தேறுங்குரங்குபோல்
ஐம்புலன்வழியேபாய் — அலைந்துதரிந்திடாமல் தியா

தூண்டில்முள்ளிலேபட்டுத் — துடிக்குமீன்கள்போலே
சாண்குரும்பிக்கினைதேடிச் — சங்கடப்படுமூலாமல் தியா

சோதிவிளக்கைக்கண்டு சுழன்றுவிழும்விட்டில்போல்
மாதர்வடிவங்கண்டு மயக்கங்கொண்டலையாமல் தியா

இருதலைக்கொள்ளிக்குள் இடர்ப்படுமெறும்புபோல்
மருவுகுரம்பைக்குள்ளே வருந்திக்கிடந்திடாமல் தியா

போவதுர்வருவது மானவூசலிப்போலே
சாவதும்பிறப்பது மாகித்தவித்திடாமல் தியா

காவியுடைதரித்துக் கள்ளவேஷங்கொள்ளாமல்
பூவினுலருச்சித்துப் பூசையுஞ்செய்துநீ தியா

சமுசாரசாகரந் தன்னிலழுந்திடாமல்
நமசிவாயவென்று நாவினுலுச்சரித்து தியா

நாவிக்கியிருமியே நல்கொண்டுமாய்ந்திடாமுன்
ஆவிக்காவியான ஐயர்மருந்தீசனைத் தியா

இ-ம்-நாகவராளி-ஏகதாளம்.

பல்லவி.

மருந்துகண்டுகொண்டேன் நானெரு
மருந்துகண்டுகொண்டேன்

அநுபல்லவி.

திருந்தவேகோபெல்லாந் தீர்க்குமருந்து
திருவான்மியூரினிற் பார்க்குமருந்து மருந்

சரணங்கள்.

பாட்டின்முறைப்படி கூட்டுமருந்து
பக்குவமானபின் காட்டுமருந்து
எட்டிலெழுத அட்சுரமருந்து
யாவருஞ்செய்யத் தொடங்காமருந்து மருந்

தேனிலுனைத்துள்ளே கொள்ளுமருந்து
செங்கல்லிப்பொன்னுக்கி யுள்ளமருந்து
தானேயுண்டாகித் தழைக்குமருந்து
தாளகங்கூட்டிக் குழைக்குமருந்து மருந்

பச்சிலையாலே யுருக்குமருந்து
பத்திரைமாற்ரு வற்குமருந்து
வைச்சதையெல்லாமு நீற்றுமருந்து
வாசியாகச்செய்து தேற்றுமருந்து மருந்

பஞ்சமூலமான துய்யமருந்து
பரிந்தூரசவாதஞ் செய்யுமருந்து
ஆஞ்சனம்பார்த்திடக் கண்டமருந்து
ஆனந்தபயிரவச் சண்டமருந்து மருந்

நாகத்தையுங்கட்டு நல்லமருந்து
நஞ்சையமுதாக்க வல்லமருந்து
பாகஞ்சரியாம் பசியமருந்து
பதங்கண்டபேர்க்கு வசியமருந்து மருந்

மிகுநீரைக்கட்டிப் பலஞ்செய்மருந்து
மேவிதார நலஞ்செய்மருந்து
தகுமெண்விதமுத லாகுமருந்து
சர்வசித்திரச வேகமருந்து மருந்

உலகிலெல்லாச்சித்து மாடுமருந்து
ஓரேழுலோகமுங் கூடுமருந்து
பலநாரிலன்றுகாண நீருத்தமருந்து
பாலியிடம்வாப் பொறுத்தமருந்து மருந்

கனிகொள்சுந்தரர்க்குக்கண் கொடுத்தமருந்து
கண்டப்பர்சூலையைக் கெடுத்தமருந்து
இளமைநீலகண்டர்க் கிந்தமருந்து
இணையிலாவீரமே வாய்ந்தமருந்து மருந்

கருவித்தைமாற்றுவார் தேடுமருந்து
காட்டுப்புலிபாம்பு நாடுமருந்து
வருசயமக்கினி குறையாமருந்து
வாழ்பீதகற்க முறையாமருந்து மருந்

மாத்திரையாக்கவே மண்ணுமருந்து
வைப்பாக்கிக்கொள்வார்க்குப் பொன்னுமருந்து
பாத்திரத்திற்சேரும் துங்கமருந்து
பாதரசந்தரும் லிங்கமருந்து மருந்

*

இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

நமக்கருள்செய்வானொன்று - நம்பாதே - நெஞ்சே நீ

அநுபல்லவி.

தமக்கடிமைத்தொழில்செய் தொண்டருக்கல்லாமல்
தாமரைத்தட்சூழ்திரு
வான்மியூர்மருந்தீசனார் நமக்

நீ

சிவநாமகீர்த்தனங்கள்.

சரணங்கள்.

நாமெனுமகங்காரம் நமைவிட்டுநீங்கவில்லை
நாசப்படாதஅந்த ஆசைப்பேயுந்தூங்கவிலலை
காமவெறிகெட்டதல்லை தாமசமும்விட்டதில்லை

கடைகெட்டகோபமும்
நமைவிட்டுப்போகவிலலை நமக்

ஐம்புலனும்பஞ்சமா பாதகர்சாகவில்லை
ஆனியாயச்செய்கையாஞ் சனியுமொழியவிலலை
வம்புமொழியோயவில்லை டம்பமதுமாயவிலலை

மானபிமானங்களுக்
கூனமொன்றும்நேரவில்லை நமக்

மதமோடகந்தையெல்லாஞ் சிதலமானதேயில்லை
வசைபெறுலோபகுணப் பசையீனமாகவில்லை
வதைசெயுந்தொழிலோ சிதைவாகிகெட்டதில்லை

மருந்தீசர்பாதத்தன்பு
புரிந்துவாழ்த்தவேயில்லை நமக்

இராகம் - தனுசரி-ஏகதாளம்.

பல்லவி.

சோதனைசெய்யலாமோ - சிறியனேனைச் - சோதனை

அநுபல்லவி.

மாதவர்சேர்திரு வான்மியூர்மருந்தீசனே
வந்தனைசெய்யவந்த மைதனையுமிப்படி சோத

சரணங்கள்.

புராணம்நான்கேட்டதில்லை போதம்தீதந்திதில்லை
தாராசாரந்தெரிதாயில்லை சாதனையில்லைவத்தாயில்லை
துராசாரதஞ்செயாதனை வாராதன்பத்தபராதமொரு

துட்டுவ்குமையாகப் போதை
கட்டிப்போவென்பார்கள் போலே சோதனை.

சாஸ்திரங்கற்றதியேன் சமயாசாரமறியேன்
பாத்திராபாத்திரங்கள் பழித்துங்கேட்டுமறியேன்
நேத்திரமில்லாதார்புள்ளம் பார்த்துவரவில்லையென்று

நிஷ்டூரஞ்சொல்லி பொரு
பட்டோலைபடிப்பாருமுண்டோ சோத

மந்திரோபதேசமுநீயே வந்துசெய்ததுமில்லை
பூதியெனக்கேயில்லை போதித்தாயோவில்லை
மந்தமருங்குழந்தைமுலை வந்தருந்தவில்லையென்று

மாறுகொண்டடிப்பாளோ தாய்
வேறுவகைசெய்குவாளோ சோத

திட்டிவாசலில்நுழைந்து தெட்டிவருவார்கள்போலுன்
கட்டளைகடந்துவழி பட்டிடாதிருந்தேனல்லேன்
குட்டினாலுமேதெரியாப் பட்டியாய்த்திரியவிட்டுக்

குள்ளனைக்கொண்டுபோய்ப் பெரும்
பள்ளத்திலள்ளுவார்போலே சோத

இராகம்- பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

காட்டிக்கொடுக்காதே காலனுக்கென்னைக்
காட்டிக்கொடுக்காதே

அநுபல்லவி.

ஊட்டிவளர்த்தகிளைங் கிள்ளையைப்பூனைவாயி
லொப்பித்தாற்போல்வான்மியூர் அப்பனே
மருந்தீசனே காட்டி

சரணங்கள்.

கல்லிலுமுள்ளிலுங் கட்டியிழுப்பானுமே
கொல்லுகொல்லென்று கையால்
குத்தியடிப்பானுமே காட்டி

வச்சிரவுலக்கையாலே மண்டையிலடிப்பானுமே
உச்சியிலீயங்களை யுருக்கியூற்றுவானுமே காட்டி

சிவதரிசனஞ்செய்யாத தியவர்கண்களையெல்லாம்
கவலியுறத்தியிற் காய்ந்த
கத்தியால்கொத்துவானுமே காட்டி

சிவதீக்ஷைசெய்யும் நாவைச்
சேர்த்துப்பிடித்தி மூத்து
அவலமுறத்தூண்டி துண்டாய்
அறுத்துவிடுவானுமே காட்டி

சிவனுக்கெனும்பொருளைத் திருடித்தின்பவர்களை
பவந்தோறும் நிரகப்
பள்ளத்தில்தள்ளுவானமே காட்டி

சாம்பசிவனூர்கோவில் தருமங்கெடுப்பவரைப்
பாமபுன்தேளரும் வதைக்கும்
பாழ்நரகில்சேர்ப்பானமே காட்டி

அடியார்களைநிந்திக்கும் அசடர்களையெல்லாம்
ஓடியோடியென்று தண்டா
லிடித்துக்கொல்லுவானமே காட்டி

கோயிலுடைமை யெல்லாம்
கோயிற்பூனைபோலுண் பார்கள்
வாயைக்கிழித்துத்தீயை வாரியும்றுவானமே காட்

பொய்வார்த்தைகள்பேசும் புலையர்தம்வாயிலே
நெய்யைக்காய்ச்சி பூற்றி
நெருப்பால்சுடுவானமே காட்டி

குருவைநிந்தனைசெய்யும் கொடுமையுள்ளவர்களை
யெரியுமெய்க் கொப்பளாயி
லெடுத்துப்போடுவானமே காட்டி

பிறர்மாதரையிச்சிக்கும் பேயர்தங்களையெல்லாம்
உறுமிப்பார்த்துத் தண்டால்
ஓங்கியடிப்பானமே காட்டி

இன்னுமிப்படிக் கொத்த
பாவஞ்செய்வாரை யெல்லாம்
பின்னுமுன்னும் பாராமல்
பிடித்துவதைப்பானமே காட்டி

இராகம்-சுரிட்டி-சாபுதாளம்.

பல்லவி.

அம்பலத்திழுத்தென்னையாட்டுங்காட்டிவிட்டீரே
அடிப்பதேயுமக்கடுப்பதே

அநுபல்லவி.

உம்பர்கள்தொழுமருள் தீசரேயெனியேனுக்
குள்ளதுரிய தெல்லாம்
கள்ளமின்றிச்சொன்னக்கா அம்

சரணங்கள்.

சொந்தப் பாராட்டிக் கொண்டு
வந்தென்குறைக ளெல்லாம்
அந்தரங்கமாக மைந்தனுன்
சொல்லிக்கொண்டால் அம்

பிறருக்குத்தெரியாதென் மறுமங்கலியெல்லாம்
பொறுமையுடன்கேளு மெனை
வுறவுடன்சொல்லிக்கொண்டால் அம்

ஆருமறியாமலென் னேர்நிருவாகத்தையெல்லாம்
நேருக்குநேராய் நின்று
சீறுடன்சொல்லிக்கொண்டால் அம்

ஐம்பொறிவேடருமது செம்பதுமப்பாதமலர்
நம்பும்வழியை மறுத்து
வம்புகள்செய்வதைச்சொன்னால் அம்

இராகம்- தனுசரி-தாளம்-மிஸ்ரசாதிசாபு.

பல்லவி.

தினந்தினம்மருந்தீசர் பாதங்கள்
சேவித்திடாயோ நெஞ்சே
நின்றுபாவித்திடாயோ நெஞ்சே

அநுபல்லவி.

வனந்தனிற்சென்று தவங்கள்செய்யினும்
மாறுமோஇந்த சென்மம்-இன்னம்
ஏறுமேபெருங் கர்மம் தினம்

சரணங்கள்.

தேடும்பொருள்களும் மாடுமனைகளுஞ்
சிவனுடல்விடுமப் போது-துணை
யாய்வரவேமாட் டாது
பாடுமடியார்கள் கூட்டத்தைச்சேர்ந்து

பாசமெல்லாத்தையும்நீக்கி சிவ
நேசவமுதுண்டு தேக்கி தினந்

இஷ்டமாசித்திகள் தேடிக்கொண்டாலும
அடுக்குமோமோசஷ்டி நம்மை
விடுக்குமோ சூடு காடு
நஷ்டப்படுந்தொழில் செய்வார்களுமுண்டோ
நல்லவழிதனைத் தேடிப் புகழ்
சொல்லுந்துதிகளைப்பாடி தினந்

மக்களெல்லாருக்கு நாமேதுணையென்று
மயங்கிவீணிற்சாகாதே நாளும்
தியங்கிப்பாவி யாகாதே
துக்கநிவர்த்தியைத் தேடிக்கொள்வதே
சுகமென்றுயோசித்து வாசம்
தகுமலராற் பூசித்து தினந்

சம்புசதாசிவ சந்திரசேகர
சங்கரஞானவிஞ்ஞதா மலர்ப்
பங்கயநேர்தந பாதர்
அம்பிகைபாகனே வான்மியூராவென்று
அன்பொடுநாவிலுல் வாழ்த்தி மிகும்
இன்புடனேமுடி தாழ்த்தி தினந்

இராகம்-தர்பார்-சாபுதாளம்.

பல்லவி.

புண்ணியவான்எவனே அவனேகண்ணியவான்

அநுபல்லவி.

பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்
பான்மைபோல்வான்மியூ ரீசனேப்போற்றும் புண்

சரணங்கள்.

வேதவேதாந்தங்க ளுணர்ந்தவரும்மலர்
விண்ணவரும்அவ ருக்கரசுமமலர்
சேரனுமமலர் போதயனுமமலர்
சிற்பரனேத்தினம் அற்புடனேத்தும் புண்

அரசரும்அரசர்க் கரசருமல்லர்
அஷ்டதிக்குகளும் ஆளுமவருமல்லர்
பரவியநவகோடிச் சித்தருமல்லர்
ன்பனகபூஷண முன்னவனேத்தொழும் புண்

பாத்திராபாத்திரங்கள் அறிந்தவரும்மலர்
பாபபுண்ணியங்களைக் கண்டவரும்மலர்
சாஸ்த்திரபுராணங்கள் கற்றவரும்மலர்
சாம்பவமூர்த்தியை ஏம்பலோடேத்தும் புன்

நீதிஅநீதிகள் தேர்ந்தவரும்மலர்
நிஷ்டைகளுரும் யோகிகளும்மலர்
ஆதிஅநாதியு மாமருந்திசை
அநுதினமனதினில் நினைவொடுவாழ்த்தும் புன்

இ-ம்-சருட்டி-மலாரி-சாபுதாளம்.

பல்லவி.

இந்தமருந்தில்லாம லெந்தவுயிருஞ்சீவித்
திருக்கமாட்டாது நெஞ்சே

அநுபல்லவி.

எந்தவயித்தியரும் தந்தஞ்செயல்களெல்லா
முந்தும்படிக்கு நானுஞ்
சிந்தையிலவைக்கும்வான்மியூர் இந்த

சரணங்கள்.

காமமாகியவாதரோகம் தலை
காட்டிடாமலே யஞ்சி
யோட்டமெடுக்கச்செய்யும் இந்த

கோபமாகியபித்தரோகம் கொள்ளும்
கொட்டமடங்கிப் பயப்
பட்டோடுமாறுசெய்யும் இந்த

மயக்கமாகியசிலேஷ்மரோகம் இப்போ
மதிகெட்டேனினியிந்தப்
பதிகிட்டேனெனச்செய்யும் இந்த

லோபமாகியசுரரோகம் இந்த
லோகத்திராமலோடிப்
போகத்துரத்தித்தொலைக்கும் இந்த

ஆணவமாஞ்சன்னிரோகம் விரும்
படங்கியொடுங்கியுட்புல்
லடங்கியோடவேசெய்யும் இந்த

பிறவியாகியதொந்தரோகம் எந்தப்
பேச்சும்பேசாமல்பெரு
மூச்சுவிட்டுக்கொண்டோடச்செய்யும் இந்த

கன்மமாகியருஷ்டரோகம் மிகக்
கத்திக்கொண்டுமனப்
பித்துக்கொண்டோடச்செய்யும் இந்த

இராகம்-வசந்தா-சாபுதாளம்.

பல்லவி.

பழந்திருட்டாமே சாமிநீர்
பழந்திருட்டாமேசாமி

அநுபல்லவி.

எழுந்துபோமென்றுசொன்னால்
அழுந்திவிட்டார்ந்ததென்ன பழந்

சரணங்கள்.

பார்வதியாருடலிற் பாதிகவர்ந்தாமே
சார்கங்கையாளையொரு சடையிற்கரந்தாமே பழ

அருங்கவர்பத்திலிக ளாடையைக்கவர்ந்தாமே
வருந்துமவர்கள்கையில் வளையலுங்கவர்ந்தாமே பழ

வாசுணன்மனையாளே வாயில்போட்டுக்கொண்டாமே
பசவும்காசைக்கரற்பெண்ணைப் பசாசாகச்செய்தாமே பழ

கும்பிடவந்தபெண்ணின் கூந்தலைக்கவர்ந்தாமே
கும்பலாமோவும்மை நாதமோமருந்திசரே பழ

இராகம்-காம்போதி-சாபுதாளம்.

பல்லவி.

ஆருக்குத்தான்தெரியாது உம்முடையசேஷ்டி

அநுபல்லவி.

பாருக்குளேபுகழ் மேவியவான்மியூர்ப்
பார்வதியார்பாகமாமருந்திசரே ஆருக்

சரணங்கள்.

பிட்டுண்ணவேயிச்சைபட்டுமுள் சுமந்து
பிரம்படியுமபட் டீரே
வெட்டும்விறகைத்தலையிற் சுமந்தரூ
விலைகூறிவிற்றலைந்தீரே இப்போ
பட்டத்துராசன்போலே வெகு
திட்டங்கள்செய்து மேன்மேலே
பவனிவருகிறீர் அவனிதனிலுள
ளவருமறியவே சவலைமதியிது ஆரு

கழியர்போற்போய்வலைவீசி மீன்பிடித்துந்தக்
கழியர்கலையு மணந்தீர்
இழிவெனவெண்ணுமல் வேடனைச்சிலிறைச்சி
யின்புமாயுண்டிருந்தீரே இப்போ
அழகில்மன்மதன்தோற்க இந்தச்
செழுமையேதென்று பார்க்க
அருமையோடிவெகுபெருமை மருவியே
தெருவிலனுதினம் வருதல்சரியல ஆரு

பலமுள்ளவர்போலே சண்டைக்குப்போயங்கே
பல்லைத்திறந்திளித் தீரே
சிலையினல்அருச்சுனன் மண்டைதனிலடிக்கச்
சிந்தைகலங்கிநின்றீரே இப்போ
மலையின்மேலேவாழும்ஒருகிலவராகித் தேவர்சூழு
மகிமைகொடு வேகுசுகமுமருவினீர்
செகமதிலெவரும் ஈகுதலறிகிலீர் ஆரு

சொந்தகுலத்திற்பெண்ணைச் சுந்தரர்கொள்ளப்போன
சுபமுகூர்த்தத்தைக் கெடுத்தீர்
தந்திரமாய்எனக்கடிமை யென்றுசபையில்
தப்புமுறிகாட்டிச்சாதித்தீர் இப்போ
தொந்தோமெனவேயாடிக்கொண்டு சோதி
மந்திரரூபமுங் கொண்டு
கர்க்கலெவர்க்குமும் அரகரவெனவே
அருகிலரியயன் வரவும்வருகிறீர் ஆரு

இராகம்-பியாகடை-சாபுதாளம்.

பல்லவி.

பெண்ணுக்கிடங்கொடுக்கப்
போயுமதுபிழைப்புபேய்த்தனமாச்சுதையர்

அநுபல்லவி.

கண்ணுக்குக்கண்ணுயன்பரைக் காக்கும்மருந்தீசரே
கங்கைக்கிடங்கொடுத்தி லெங்கேறிக்கொண்டாள்பாரும்—பெண்

சரணங்கள்.

மகாராசன்மகள்வந்து வாய்த்தாளென்றுமகிழ்ந்தீர்
சுகமேதாகிலுமுண்டோ சொல்லுமவளாலுமக்கு—பெண்

மாயையரலேயுமது மகத்துவமெல்லாமடக்கிப்
பேயுட்புகுந்திருந்து பிச்சைவாங்கவுஞ்செய்தாளே—பெண்

அரையிலுடுக்கக்கந்தை யாகிலும்கொடுத்திடாமல்
இரைக்கும்புலித்தோலுடுக்க இசைந்தாளேமகராசி—பெண்

அவளில்லாமலும்மாலே யாவதேதேனுமுண்டோ
எவளவுமதியில்லாம லேமாந்துபோனீரோசாமி—பெண்

ஒருவிதத்திலாகிலும் மூமக்கதிகாரம்வையாமல்
நிருவாணமாய்த்திரியும் நிர்வாகத்தில்வைத்திட்டாளே—பெண்

குதித்தக்கூத்தாடிப்பிழைக்கும் கூட்டத்திற்சேர்த்துவிட்டு
மதிக்கிறீலோவும்மை மனதினிற்பாக்கியசாலி—பெண்

பாதம்நோகுமென்று பரிந்திடாமற்பரவைபால்
தூதுநீர்நடந்துசெல்லத் துணிந்திருந்தாளேநீலி—பெண்

சகோதரனுக்கேயெல்லாச் சம்பத்துக்கொடுத்துவிட்டுத்
தகாதவொன்றும்மைமத் தள்ளிவிட்டாள்காலசாலி—பெண்

திருவொற்றியூர்த்

தியாகராசர்கீர்த்தனங்கள்.

இராகம்-சாமா-ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசிவசிவ சங்காரசரணம் - ஆரோம் அரகர

அநுபல்லவி.

அம்போருகமலர்ப் பாதாசரணம்
ஆதிபுரிவாழ் நாதாசரணம் சம்போ

சரணங்கள்.

ஆதிபுனிதியு மாயினேசரணம்
ஆகமமருள்திரு வாயினேசரணம்
சோதியுட்சோதியாய் மேயினேசரணம்
சுந்தரர்தூதாய் போயினேசரணம்—சம்போ

நம்பினபேரை யாண்டவாசரணம்
நாகாபரணங்கள் பூண்டவாசரணம்
அம்பலத்தாடிய தாண்டவாசரணம்
அரியயன்தேட ரீண்டவாசரணம்—சம்போ

வினைனெருக்கி வரிந்தாய்சரணம்
வானவர்க்கருளைப் புரிந்தாய்சரண
நரிபரியாகத் தெரிந்தாய்சரணம்
நாயேன்தனையும் பரிந்தாய்சரணம்—சம்போ

மகிழடிதன்னி லிருப்பாய்சரணம்
மார்பினிலேன மருப்பாய்சரணம்
சுகவடிவாம்பிகை விருப்பாய்சரணம்
சுந்தரக்கயிலைப் பொருப்பாய்சரணம்—சம்போ

நதிமதிசடையிற் சூடினேசரணம்
நந்திமுனந்தமோ டாடினேசரணம்
சுதியொடுவீணை பாடினேசரணம்
சுந்திரர்மணத்தை நாடினேசரணம்—சம்போ

இராகம்-வராளி-சாபுதாளம்.

பல்லவி.

ஆசைதிரயங்களை நீக்கினாலேமோக்ஷம்
அடுக்கும் பிறவிவிடுக்கும்

அநுபல்லவி.

வாசப்பொழில்புடை சூழ்திருவொற்றியூர்
வாராகியதியாக ராஜரைப்பூசித்த—ஆசை

சரணங்கள்.

மண்ணாசையினாலே குருகுலவேந்தர்கள்
மாய்ந்துபோனதை யறியாயோ
பெண்ணாசையினாலே இராவணன்முதலானோர்
பேர்கெட்டிறந்ததை குறியாயோ—ஆசை

பொன்னாசையெல்லாருங் கொண்டிருந்தாருயிர்
போம்போததைக்கொண்டு போனாரோ
தன்னுரிமைக்குதி தேடித்தின்பவர்களுஞ்
சாகா திருந்தாரோ—ஆசை

ஒருகுடைக்கீழில் காளிணுமேமன்
ஒழிந்து போகாமே
இருவினைவிளைதற்கு ஆசையேமூலம்
என்ப தறியாயோ—ஆசை

பொன்னும்மண்ணும் எல்லாப்பொருள்களும்
புரந்தக னென்பாரே
அன்னவனடிக்கே ஆசைவைத்திருந்தால்
அழியாப்புகழ் கிடைக்கும்—ஆசை

இராகம்-கேதாரகௌளம்-சாபுதாளம்.

பல்லவி.

சங்கரசங்காதரஓம்அரகர சங்கரசங்கர

அநுபல்லவி.

சங்கணகரநாகா ஓம்அரகர
சங்கரிவாமபாகா ஓம்அரகர் சங்கர

சரணங்கள்.

சாமவேதப்பிரியா ஓம்அரகர
சத்திநடனபாதா ஓம்அரகர
சோமசுந்தரசர்மா ஓம்அரகர
சுத்தபுவனவாசா ஓம்அரகர சங்கர

காலசங்காரமூர்த்தி ஓம்அரகர
காமதகனநயன ஓம்அரகர
பாலசந்திரசூடாதர ஓம்அரகர
பரதபராபரஅர ஓம்அரகர சங்கர

கமலஙடனயேகா ஓம்அரகர
காருண்ணியசத்தியேகா ஓம்அரகர
நிமலஅமலநிரஞ்சன ஓம்அரகர
நிர்க்குணநிர்விகாரஅர ஓம்அரகர சங்கர

இராகம்-அம்சத்துவனி-ஏகதாளம்.

பல்லவி.

வேதப்பழரசமே - ஞானப் - போதத்தெழுரசமே

அநுபல்லவி.

சீதப்புதுமதி குடியரசமே
திருவொற்றியூரில் மருவுற்றரசமே வேதப்

சரணங்கள்.

பாலிப்பழிக்கும் நிறமுளரசமே
பச்சைநிறமுமோர் பாலுளரசமே
நீலநிறமுஞ் சிறிதுளரசமே
நீடியபொன்னிற மும்முளரசமே-வேதப்

எங்கும்பூரண மாய்நின்றரசமே
எளியேனுக்கு மினித்துரசமே
சங்கராகமம் பெற்றுளரசமே
சந்ததமந்திரு ளுடுரசமே-வேதப்

சித்திரப்பலகை வடிவாம்சமே
செந்தமிழ்மூவர் பாடியரசமே
வித்தகவடிவாம் பிகைமகிழ்சமே
வேந்தன்தொண்டைமான் பணிசெயும்சமே-வேதப்

பூந்தார்க்கொன்றை குடியரசமே
போதன்சூனக்கரு கூறியரசமே
மாந்தாளுமை பெறுத்தருரசமே
மகிழுடிதன்னி லிருந்திரசமே-வேதப்

இராகம்-அடாணை-திரிபுடைதாளம்.

பல்லவி.

தியாகராஜனென்ற பேருமக்குச்சரியான
செல்வங்கொஞ்சமு மில்லையே-சுவாமி-யிப்போது
செல்வங்கொஞ்சமு மில்லையே.

அநுபல்லவி.

நியாயமாகச்சொல்வேன் ஆதிபுரீசரே
நீரேயோசித்துப்பாரும் வேறேசாகூகிகள்வேண்டாம்-தியா

சரணங்கள்.

ஊரானதுதொற்றி யூரொன்றுவழங்கலாச்சு
உடனேமீட்டுக்கொடுப்பா ரொருவருமில்லாமற்போச்சு
ஆகிலுமிந்தால் வருமேயொழியாயேச்சு
அய்யரேயுமக்குந்தெரிக் திருக்குமிந்தப்பேச்சு-தியா

சுந்தரர்க்குப்பிச்சைவாங்கிச் சோறுமுன்னங்கொடுத்தீர்
சுள்ளிவிற்கூட்டுச் சுமந்துவிற்கடித்தீர்
வந்திக்குகூலியாய்ச் வைகையில்மண்ணெடுத்தீர்
வஸ்திரமில்லாமையினால் வயப்புலித்தோலுடித்தீர்-தியா

வருமன்பர்மண்ணிற் சிந்தும்
மாம்பிஞ்சைப்பொறுக்கித் தின்றீர்
மாதவர்பத்தினி மார்கள்
தரும்பிச்சைவாங்கச் சென்றீர்
பொருதும்வேட னெச்சிலூனைப்
பொசித்துவாய்க்கூர் மென்றீர்
பேரஜனங்கடை யாமையால்
போயொருபிள்ளையைக் கொன்றீர்-தியா

மண்ணுண்டமாயவன் றன்னை
மைத்துனன்முறைமை கொண்டீர்
மகன்குமாரைத்திருடி மணஞ்செய்ததுக்கண்டீர்
உண்ணுமுணவில்லாமல்
ஓடிப்போய்விஷத்தை யுண்டீர்
உறவுபேய்களல்லாமல் உத்தமர்களோயல்லீர்-தியா

இராகம்-பரசு-சாபுதாளம்.

பல்லவி.

வாவாமனக்குரங்கே - என்னுடன்வாவா - மனக்குரங்கே.

அநுபல்லவி.

நீவாலாட்டிக்கொண்டெங்கும் ஓடாதே
நிச்சயமாயொற்றியூர்க்குச் செல்வேனென் —வாவா

சரணங்கள்.

மோகமாங்குன்றின்மேல் மூந்தியேறிக்கொள்ளாதே
மூட்மாங்குகைக்குள்ளே மூன்னுழைந்தகொள்ளாதே
போகமாங்கனிகளைப் புசிக்கநினைக்காதே
புண்ணியமாமமுதை யுள்ளவெறுத்திடாதே— வா

ஆங்காரமாம்வயிர மத்தைப்பற்றிக்கொள்ளாதே
ஈனியாயமாம்கொடியை யங்கயிற்சுற்றிக்கொள்ளாதே
தூங்காத்தூக்கமென்னுஞ் சுகத்தைதள்ளிவிடாதே
துச்சமாம்பொருள்களுமே லிச்சைவைத்திடாதே— வா

கலவியாகும்பலாக் கனிச்சுளையைத்தின்னுதே
காமமாருங்களைக் காதலிற்குடிக்காதே
குலமாதராகும்பூவைக் குலித்துமோந்திடாதே
குரோதமாகியவெட்டிக் கொட்டையைத்தின்னுதே— வா

கோபமாகுஞ்சுடு கொள்ளியைமிதித்திடாதே
கொலைத்தொழிலொருமஞ்சரிக் குடியிருட்டின்சேராதே
பாபமாகும்பணம் பழத்தையருந்திடாதே
பத்தியுடனேவந்தால் மூத்திநிலையுண்டாகும்— வா

இராகம்-நாதநாமக்கிரியை-சாபுதாளம்.

பல்லவி.

சிவசிவவெனஅனுதினம் நினைடனமே
சிவாதர மாமதுமனமே.

அநுபல்லவி.

அவனியிலுண்ணு முணவுகளுட்டுக்
காதாரம்மது சேதாரம் சிவசிவ

சரணங்கள்.

பணம்பணமென்னப் பரதவிக்காதே
பாதகனைப்பாடிப் பிழைத்தலையாதே
குணமதுகைவிட்டே வெணமொழியுணர்ந்து
குறவள்ளிமாமன் உறவைவிடாமீதே—சிவ

மாதர்கள்மேலே மையல்கொள்ளாதே
மண்ணுசையினிற் சிக்கிக்கொள்ளாதே
ஓதுவதொழியே லெனுமொழியுணர்ந்து
உம்பர்கள்கோமான் னன்பொழியாதே—சிவ

கருவிகளொடுங்குங் கால்கத்தன்னில்
கருதித்துதித்தப் பணியவொண்ணுதே
பருவத்தேபயிர்செய் யெனுமொழியோர்ந்து
பரமனேப்பாடி வரமபெறுமனமே—சிவ

குணக்கேடர்கள்தங் கூட்டுறவாலே
குபேரசம்பத்து கழுமலும்
இணக்கமறிந்திணங் கெனுமொழியோர்ந்து
ஈசனடியார் நேசத்தைக்கொண்டி—சிவ

இராகம்- பைரவி-தாளம்.

பல்லவி.

என்மனதையடக்கும் வல்லபையுமக்கில்லேயோ
ஈசரேயாதிபுரி வீரசோ.

அநுபல்லவி.

தென்மதுரையில்எல்லாம் வல்லசித்தனென்றுவந்தி
தேவரவர்நீரல்லாமல் வேறேயாரோசொல்லும் என்

சரணங்கள்.

வேதனெடுத்தலையை நகத்தினுங்கிள்ளி-யவன்
விரூப்பட்கினவ ராரோ
வாதுக்காடுங்காளியெதிராடியவளுக் கிருந்த
மதத்தையடக்கினவ ராரோ என்

வீரபத்திரனைக்கொல்லுதக்கன்தலையறுத்து-அவன்
வீரமட்கினவ ராரோ
நாரசிங்கத்தின்கொழுப்பை யடக்கியந்தவுருவம்
நசித்திடச்செய்தவ ராரோ என்

இந்திரனிறுமாப்பை யொருசிறுதரும்பாலே
ஈடழித்தவ ராரோ
மூனுமிராவணனை யொருகால்பெருவிரலே
யூன்றியடக்கினவ ராரோ என்

மதியாமலெதிர்வந்த காலனிறுமாப்பை
மாற்றியடக்கினவ சாரோ
கதிசேரும்எண்ணமில்லா திரிபுரர்குறும்பை
கட்டோடடக்கினவ சாரோ என்

இராகம்-ஆனந்தபைரவி-சாபுதாளம்

பல்லவி.

எப்போதுதெரிவிப்பையோ எளியேற்குன்னை—எப்

அநுபல்லவி.

அப்பாஆதிபுரி அய்யா குருவாய்வந்துநீ—எப்போது

சரணங்கள்.

சகலகேவலமென்றும் தத்துவசாலமென்றும்
புகலுன்றஅந்த பொய்தனையொழிவித்து- எப்

என்னுடையசெயலென்றும்என்னுடையபொருளென்றும்
உன்னும்அஞ்ஞானமே லோங்காமலொழிவித்து- எப்

உன்னியன்றிவேறே யொருபொருளுண்டென்னும்
அன்னியகாட்டம்என்னுள் அழுந்தாமலொழிவித்து- எப்

மாயையாலேவரும் மயக்கமெல்லாம்ஒழித்து
நீயுகானுமாறு நிற்குநிலைபெறவே- எப்

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிபுரீசனைத் தரிசனஞ்செய்யும்
அன்பனைத் தரிசனஞ்செய் மனமே

அநுபல்லவி.

சாதியினல்மிகத் தாழ்ந்தவராகிலும்
சாஸ்திரம்ஒன்றும் உணராராகிலும் ஆதி

சரணங்கள்.

பிள்ளைகள்பெண்டுகள் மேல்வைக்கும்ஆசைப்
பேய்நீங்குவதோர் பிரயாசை
கள்ளாமிலாமலே சிவபூசை
காதலிறைச்செய்துகொண்டு நிராசையின் ஆதி

ஐம்புலனடக்கித் தஞ்செயல்விடுத்து
ஆகாவழிசெலும் மனந்தனைதடுத்து
சம்புவுக்குடல்பொரு ளாவியைக்கொடுத்து
சரணுகதிநீ யேயென்றடுத்து ஆதி

சாதிமானமொன்றும் வைத்துக்கொள்ளாதே
சமயமானமெள் ளளவுந்தள்ளாதே
நீதிவழுவிதென நெஞ்சிலுள்ளாதே
நீசுகப்படும்வழி யதனையெள்ளாதே ஆதி

காலாகாலங்க ளிடங்கள்நோக்காவே
கணப்பொழுதானும் வீண்போக்காதே
மேலானவர்தனை யென்றும்நீக்காதே
வீணரையுன்னிடத் தினிற்சேர்க்காதே- ஆதிபு

இராகம்-வசந்தா-சாபுதாளம்.

பல்லவி.

ஆடினர்நடனங் தியாகராடினர்.

அநுபல்லவி.

பாடியபடியவரெல்லாங் கூடியஒற்றியூரில் ஆடி

சரணங்கள்.

நந்திமுகன்கயிலேவிட்டு வந்துதவம்புரிந்து
சந்ததமும்தரிசிக்கச் சுந்தரியுடனிருந்து-ஆடி

மாயவனுர்வந்துளன்புராய் வருத்தவம்புரிந்து
நேயமொடுந்தரிசிக்க ஏயவடிவாளொடமர்ந்து-ஆடி

சோமசமுனிவர்வந்து காமவிகாரம்மிகுந்து
நேமமாய்த்தவம்புரிந்து ஏமமொடுதரிசிக்க-ஆடி

பிரமனும்வந்திருந்து வரமுறத்தவம்புரிந்து
பரவியேமனமுவந்து தரிசனஞ்செயவமர்ந்து-ஆடி

இராகம் - ஆகிரி- சாபுதாளம்.

பல்லவி.

மருந்தீசனேயேபாடுங்கள் - கவிவாணரே- மருந்தீசனையே

அநுபல்லவி.

பெருந்தினிகள்தின்று உடலைவளர்க்கும்மூடப்
பேரைப்புகழ்ந்துபாடவேண்டாம் அந்த
நாய்கள்முகத்தைப்பார்க்கவும்வேண்டாம் மருந்

சரணங்கள்.

பொருளைதேடிப்புதைத்துப் பூதம்போற்காத்திருக்கும்
மருளர்மெற்கவிபாட்டவேண்டாம் அந்த
இருளரிடம்போகவும்வேண்டாம் மருந்

கூத்திகளுக்கேயிட்டுக் குரங்குபோலேமுழிக்கும்
தூர்த்தர்வீட்டிலும்போகவேண்டாம் அந்தக்
கார்த்தபங்களைக்காணவும்வேண்டாம் மருந்

பொய்களேயேபேசி வயிறுவளர்க்குந்துஷ்டப்
பழுக்கைளைப்புகழ்ந்துபாடவேண்டாம் அந்த
அழுக்கர்முகம்நாடவும்வேண்டாம் மருந்

சாதுக்களைச்சிவ மாகப்பாவித்திட்ட
சண்டாளனைப்பாட்டவும்வேண்டாம் அவனைக்
கண்டாலும்பேசவேவேண்டாம் மருந்

ஹிசாகம்-கேதாரகௌளம்-ரூபகதாளம்.

பல்லவி.

நீலகண்டமஹாதேவ நிகிலலோகஜனப்ரதாப

அநுபல்லவி.

பாலசந்திரசேகரா பார்வதிமனோஹரா ஹரா—நீல

சரணங்கள்.

தவளிதகைலாச கேதாரா
சாமவேதகீதஸ் தோத்ரா
கவனபிர்மகபால பாத்ரா
காமதகனலலாட நேத்ரா நீல

பக்தரிதய லயனிவாச
பரமார்த்த அகண்டவிலாச
சத்துச்சித்தானந்த ஞானப்ரகாச
சைவசித்தாந்த ரகஸ்யவிஸ்வேச நீல

மேருகோதண்ட பாணிப்ரதாப
வேதாந்தகங்காதர சுப்ரதீப
நாரதாதியர்தியான ஸ்வரூப
நாதாந்தியென் ஆத்மலாப நீல

இராகம்-முகாரி-சாபுதாளம்.

பல்லவி.

ஏனிந்தகஜேன்மத்தை மனமே - வீணில்
யெடித்ததென்னகண்டாய் நீகனமே

அநுபல்லவி.

தேன்பொழில்சூழ்திரு வானைக்காவலில்வாழுந்
தேவாதேவாதேவா வென்றுருகாமல்—ஏனிந்த

சரணங்கள்.

அற்புத்தியைவிட்டு மாறு - சிவத்
தேறண்டுசெய்துகண்டு தேறு
நற்புத்தியைத்தருஞ் ஞானேதயவமை
நாதா நாதா நாதா வென்றுருகாமல்—ஏனிந்த

குருநாதன்சேவடி பக்தி - செய்திக்
குவலயதன்னில் மூக்தி
அருள்ஞானப்பலன்பெற ஆனந்தத்தாண்டவ
ஹரஹம் ஹரஹம் ஹரஹ மென்றுருகாமல்—ஏனிந்த

நித்தமுநீலள்ளீ யிட்டு - யோக
நிஷ்டைவைச்செய்ய எட்டு
சுத்தசிவாமபச் சோதியில்தோன்றிடும்
சுகமே சுகமே சுகமே யென்றுருகாமல்—ஏனிந்த

சிந்தைமகிழ்ந்துநீ பாடு - அன்பாய்
சொல்லும்பொருளேநீ நாடு
இந்திராதிதேவர்க ளேத்துங்குருபர
யேகா யேகா யேகா வென்றுருகாமல்—ஏனிந்த

இராகம் - தோடி- ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரமேநினைமனமே-முத்தி-பதம்பெறலாகும்முனமே

அநுபல்லவி.

சதம்சதம்மெனும்பொருள் பதம்பதம்மய மருள்
சமரசநடம்புரிசாமிசிதம்பர நிமலன்திருவருள்கொள்ளரகர

சிதம்பரமே.

சரணங்கள்

ஒழியாக்கவலைகொண்டு விழலாய் - யாஞ்ஞ்
உண்மையில்லாவீட்டை நிழலாய்

தழுவாதிருந்ததில்லை சனமில்லைமேல் வீட்டை
சார்ந்தாலல்லோ நல்லசாபல்யமாம் பாட்டை

சந்ததமும்பெற பந்தமுமேயற
எந்தவினைத்திற மூந்தூசம்முற—சிதம்

தேகமெடுத்தவருமை யறியாய் - மோசத்
தெரிவையர்வலைச்சிக்கி முழியாய்

சாகமட்டுஞ்சம்சாரமே மேலிட்டு
சலியாமலேயுழைத்துச்சண்டாளமாந் துட்டு

சம்பாத்தியமது வம்பாகும்விதி
நம்பாதித்ததி தெம்பாயதிபதி—சிதம்

உனக்குள்ளேயுணர்வாய்நீ மோனம் - உண்மை
ஓம்வழிகாட்டுமே ஞானம்

தனக்குச்சிதம்பரஞ்சார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூட்டும் சாம்பிராச்சிய சின்மயம்

சரிவரசிவகுரு பரமயமாய்வரு
மூருவெளியெனுமொருபொருளதுவாகுறு—சிதம்

இராகம்-இந்துஸ்தான்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆசைவையாதே - வீண் - ஆசைவையாதே.

அநுபல்லவி.

நேசித்துத்தேடுவாய் ஈசன் திருவருள்
பாசமாய்நம்பிநீ மோசமாம்முப் பொருள் ஆசை

சரணங்கள்.

என்னேரம்ஈசனைப் பாடு - உன்
இருதயந்தனிற்கொண் டோடு - முன்
சொன்னமுறைகளைக் கூடு - சிற்
சோரூபானந்தத்தை நாடு—ஆசை

அன்னைதந்தையாரு மில்லை - இதை
ஆலோசித்துப்பாரிச் சொல்லை - நீ
பின்னென்றும்நம்பாதே தொல்லை - சிவ
பெருமானடியொன்றே எல்லை—ஆசை

அற்பபுத்தியைக்கொள் ளாதே - அதால்
ஆணவங்கொண்டித்துள் ளாதே - தனி
தற்பரானந்தம்விள் ளாதே - நல்ல
தருணஞ்ஞானத்தள் ளாதே - ஆசை

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

தந்தைதாயிருந்தா லிவ்வுலகத்திலுமக்கிந்த
தாழ்வெல்லாமவருமோ ஐயா

அநுபல்லவி.

அந்தமிகும்ஸ்ரீபூர் நடனத்தியாகராஜரோ
அருமையாகவேபெற்று ஒருமையுடன்வளர்த்த- தந்

சரணங்கள்.

கல்லாலொருவன்கழிந் தடிக்கவுடல்பதைக்க
காலின்செருப்பாலொரு வேடனெதிர்த்துதைக்க
வில்லினாலொருவன் வந்தடிக்கஉமதுதிரு
மேனியெங்ஙனோய் னெந்துதோஐயோ—தந்

கூசாமலிடையன்கை கோடாலியால்வெட்ட
கூட்டத்திலொருவன் பித்தாபேயாயெனத்திட்ட
வீசிமதுரைமாப பிறம்பாலடிக்கஅந்த
வேளையாரைநினைத்ததோ ஐயோஒரு—தந்

சிலமெண்ணுதொருபெண் காறியுமிழலாச்சே
சேர்ந்தவளுந்தலைமீதேற வெளிதாய்ப்போச்சே
பாலசுப்ரமண்ய வேலவன்தனையின்ற
வசந்தியாகராஜரோ ஐயோஒரு—தந்

கீர்த்தனங்கள்- மூற்றும்.

பதங்கள்.

இராகம்-அடாணை-சாபுதாளம்.

பல்லவி.

எவளெப்படிக்கொத்த ரூபவதியானாலும்
என்மனஞ்சபலிக்குமோ பெண்ணழகே

அநுபல்லவி.

சிவன்மருந்தீசன்பர தாரசோதரனென்று
தேசமெல்லாம்புகழ்ந்து பேசுவதறியாயோ எவ

சரணங்கள்.

சந்திரகிரணமல்லால் எந்தக்கிரணங்களேச்
சகோரப்பக்ஷியருந்தும் விகாரம்வீணேகொள்ளு
மந்திரங்கள்நாடாதே மருந்தொன்றுசேடாதே
சிந்தைமிகவாடாதே தினமென்னேடாதே- எவ

பாலையுந்தண்ணீரையுங் கலந்துவைத்தாலும்அன்னம்
பாலமாத்திரமுண்ணும் பக்குவந்தெரியாயோ
மேலொன்றுமெண்ணுதே வீபடுகள்பண்ணுதே
காலம்போக்கொணுதே கடிந்தென்னேச்சண்ணுதே- எவ

மேனைமுதலாகிய தேவமாதருக்கெல்லாம்
மேட்டானமேட்டியன்னைக் காட்டிலுமெவருண்டு
மானிநீயென்றறிந்தேன் மறுமியெனத்தெரிந்தேன்
தேனேயுனைப்பரிந்தேன் தெரியாதிப்போபிரிந்தேன்- எவ

இராகம்-சுருட்டி-சாபுதாளம்.

பல்லவி.

வருவதேபெருமை நமக்கவர்.

அநுபல்லவி.

திருவடையுந்தர சதையுங்கண்டவர்களார்
சந்ததமுமருந்திசர் சொந்தம்பாராட்டிக்செல்லு
சங்கோசமிலாமல்வெகு சிங்காரமுடனேயிங்கே
தாம்தாம்தாம்தாம் தாம்தாம்தாவென—வருவ

சரணங்கள்.

மெத்தமெத்தக்கொடுத்தாலும் வீணைசையடங்காது
சித்தம்வைத்துநம்மிடத்தில் தினமும்வாலாயமாமி
சின்னமென்றெண்ணுமல்லிகும் அன்னியோன்னியமாய்முழவு
தித்தோம்தித்தோம் தித்தோமெனமுழங்க- வருவ

பேரும்பிரபலியமும் பெரிதுகிடைத்தமன்றி
சீருஞ்சிறப்புமந்தச் சீமாலுல்கிடைத்தன்றே
சித்தமயல்கொண்டிதமை நத்தியனுதினம்பேரி
சேம்சேம்-சேம்சேம் சேம்சேமெனவொலிக்க—வருவ

குணம்பெரிதல்லாமல் கோடானுகோடியான
பணம்பெரிதல்லகிழப் பாலிக்கதுதெரியுமோ
பகுத்துடன்வெகுவாய் லகூம்பிரபுவோடுசங்கம்
பம்பம்பம்பம் பம்பம்பம்மெனமுழங்க—வருவ

கண்ணுக்குத்தரித்த கணவனேவேண்டுமென்ன
திண்ணமுடன்செய்ததவம் சித்தியாச்சுதென்று
தெரியவேஅபிநய முட்டனேஅரிவையர்கள்
தெய்தெய்தெய்தெய் தெய்தெய்யெனநடிக்க—வருவ

இராகம் - தர்பார்- ஆதிதாளம்.

பல்லவி.

அவரோடிடேறிவந்தால் பேசாதிருக்கலாமோ
ஆர்சொன்னமதியுனக்கு - அடிமகளே

அநுபல்லவி.

சிவசிவாமருந்திசர் மேலேகுற்றமேயில்லை
சிறிதிருந்தாலுமென்ன பிறியமுடன்வலியில்— அவ

சரணங்கள்.

சிறுபிள்ளைத்தனமின்னம் போகவில்லையென்செய்வேன்
சிர்பமிவாயென்றெனைப் போலார்படுவார்பாடுனக்கு
வறுமையாகவிழலுக் கிறைத்தநீர்பொலாச்சே
வரும்வெள்ளந்தன்னையணைபோட்டுத் தடுப்பாருண்டோ- அவ

நாரும்பூவும்போலே பிரித்தல்நமக்கழகு
நானுநுசுமப்பார்போலே பிணங்குவதோஅழகு
ஆருஞ்செய்யாதவேலை அவன்னசெய்தது
அடிபோடிபொடிநாவுங் குடிகேடிகளைவிட்டு- அவ

கல்லகாலம்மக்கு வந்தென்றெண்ணுமல்
நறுமுறுநறுமுறென உள்ளவேமொறுகிறுய்
அல்லடியவனாநீ யாரெனநினைக்கிறுய்
அரிமுதலோர்க்குஞ்செல்வ மளித்தவனென்றறியாயோ அஞ்

இராகம்-கமாசு - ஆதிதாளம்.

பல்லவி.

தூரநின்றுபேசும் என்னைத்தொடாமல்
தூரநின்றுபேசும்.

அநுபல்லவி.

வாருமென்றுதாது வலியாநான்விட்டபோது
வந்தீரல்லவாமருந் தீச்சோபோதும்போதும்— தூரி

சரணங்கள்.

உமக்குநான்செய்த உபசாரம்-சமரில்
ஊற்றும்பால்போலாச்சே யென்னசாரம்
அமைத்தபடியல்லவோ நட்க்கும்-என்றீர்
அந்தமட்டுக்கும்வாயை யடக்கும்

அடுப்பவர்குணம்வர வரவல்லவேர்தெரியும்
அடிப்போதிலேதெரிந்தால் பிடிட்பேனேவுமதுகை— தூரி

என்றுநானும்மால்சுகப் பட்டேன்-இல்லிருன்
இருந்தஆசையெல்லாம் விட்டேன்
இன்றுவழிதப்பியிங்கே வந்தீர் - வந்தும்
இலைப்பானவார்த்தைகளேத் தந்தீர்

இதையுமதரசிரு னறிகுவலெனிலுடன்
இல்லாதபழிவார்த்தைகள்-சொல்லுவாளென்றஞ்சுகிறீர்-தூர

இராகம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தமட்டும்வர்க்கைப்பற்றடி பேராசை
வைப்பதுநமக்கழ கல்லடி

அநுபல்லவி.

சொந்தமருந்தீசர்க்குநாம் தூரமல்லவென்பது
துட்டுக்கிச்சைப்பட்டாலுடன் கெட்டுபோமடிமானே - வந்

சரணங்கள்.

மாடைப்பொன் னல்லதொரு
மாப்பொன் னீந்தாலுஞ்சரி -
கூடைகூடையாய்ப் பணந்
கொட்டியளந்தாலுஞ் சரி—வந்

மானியந்தந்தாலுஞ்சரி மாடுகளீந்தாலுஞ்சரி
தானியமேயன்றியொரு தாம்பூலந்தந்தாலுஞ்சரி- வந்

மாடகூடம் பொன்னுல்
வகுத்துதந்தாலுஞ் சரி
காடுமேடுகளைக் கை
காட்டினாலுஞ் சரி—வந்

பூஷணமீந்தாலுமொரு போர்வையீந்தாலுஞ்சரி
ஏஷணத்திரயம்விட்டாலே யின்பமானதுண்டாகும்- வந்

இராகம் தோடி- சாபுதாளம்.

பல்லவி.

சங்கோசங்கொள்வானேன்-சாமிமனதில்-சங்கோசம்

அநுபல்லவி.

இங்கேவேறொருவரும் வருவார்போவாருமில்லை
யேகாந்தமாயிருக்க லாம்மருந்தீசரோ — சங்

சரணங்கள்.

ஊர்சத்தகளெல்லாம் அடங்கும்போதுதனியாய்
ஒருவருமில்லாமல் ரகசியமாகவாறீர்
ஆர்வீட்டுக்காகிலும் போனுலல்லவோபயம்
அடியாள்வீட்டுக்கெச மானன்வசப்பயமோ—சங்

புறப்படும்போதெல்லாம் சகுனம்பார்ப்பதுமன்றிப்
பொழுதெவ்வளவாச்சு தென்றுச்சம்பார்க்கிறீர்
கறுப்பொன்றுகண்டாலங்கே கலக்கங்கொண்டுநின்று
காவலாளரோவென்று மயக்கமுங்கொள்ளுகிறீர்—சங்

சந்தனகளபங்கள் தூரிகள்பூசிக்கொண்டு
சந்தோஷமாய்க்கூடி சரசங்கள்செய்யலாம்
எந்தவேளையில்மருந் தீசரோகீர்வந்தாலும்
எல்லாரும்யெதிர்கொண்டு வந்துபணிகுவாரே—சங்

இராகம்-பைரவி-சாபுதாளம்.

பல்லவி.

இந்தக்கிழவனிங்கே வந்துவந்துபோற
தேதுக்கடிமகளே.

அநுபல்லவி.

சிந்துபாடுங்கிழவன் சந்துபோனகிழவன்
திருவாண்மியூர்க்கிழவன் பெருமோசக்கிழவன் - இந்த

சரணங்கள்

காலங்கண்டகிழவன் காமமில்லாக்கிழவன்
கோலங்காட்டுங்கிழவன் கொஞ்சமதிகிழவன்—இந்த

ஆண்பெண்ணல்லாக்கிழவன் அலியுமல்லாக்கிழவன்
கோணியகாற்கிழவன் கூத்தாடிக்கிழவன்—இந்த

பாதியுட்கிழவன் பாம்பாட்டியகிழவன்
சாதிகெட்டகிழவன் சடையாண்டிக்கிழவன்—இந்த

நரைக்காளைக்கிழவன் நங்கமெல்லாக்கிழவன்
அரைக்கோவணக்கிழவன் ஆள்முழுங்கிக்கிழவன்—இந்த

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

நீபோயறிந்துவாடி-அவர்மனதை-நீபோயறிந்துவாடி.

அநுபல்லவி.

ஆர்போதனையைக்கேட்டோ வான்மியூர்மருந்தீசர்
ஆயாசமாயிருப்ப தாயெனுக்குத்தோணுது—நீபோ

சரணங்கள்.

பாலும்தேனும்போலிருந்த மகுடமெல்லாமறந்து
காலஞ்சுமாதமாய்வேறே-காட்டங்கொண்டாற்போற்காணுது

நீபோயறிந்து

இப்போதாகிலும்வரா திருந்துவிட்டாலினிமேல்
எப்போதுமவர்முகத்தை யேறெடுத்துப்பார்ப்பதில்லை —நீ

அறியாப்பருவத்தென்னை யன்பாய்மணம்புணர்ந்து
பிறியாமலிருந்திப்போ பிறிந்திருக்கும்வகையை —நீ

ஞானனுப்பினதாகத் தோணதிருக்கவேணும்
நல்ல [illegible]ளுக்கில்லை யுமக்கேயேச்சென்றுசொலலி —நீ

இராகம்-சாரங்க-சாபுதாளம்.

பல்லவி.

வருவாரடிமானே இப்போதே வருவாரடிமானே

அநுபல்லவி.

வருவார்தருவார் திருவாய்முத்தம்
வானவர்வாழ்த்தும் ஆதிபுரீசர்—வரு

சரணங்கள்.

கெவுளிகளிந்த மூலையிற்பலுக்குது
கேட்டவுடனேபெந்தன் உடலஞ்சிலிர்க்குது
கவலைவாராம லிதுவேவிலக்குது
காக்கையும்கடந்து காட்டிக்கொடுக்குது —வரு

உன்னிடவலக்கண்ணும் தோளும்ஆடுது
ஊரார்வரச்சொல்லும் நன்மையாய்க்கூடுது
பொன்மயிலேசூ ரியகலையோடுது
புறப்பட்டிருப்பா ரெனக்கிள்ளைபாடுது —வரு

முறத்தில்நீதந்த நெல்லொற்றைப்பட்டது
முன்கிரகசாரங்கள் ஒழிந்துபோய்விட்டது
குறத்திகான்சொன்ன குறிமெய்ப்பட்டது
குடிகேடிகளென்னும் எண்ணமுங்கெட்டது —வரு

வாயசமெனக்கு வலமாய்ப்போச்சுது
வலியான்குருவியு மிடமேயாச்சுது
தாயறிந்தாலே பொல்லாவச்சிது
சந்தோஷகால முனக்கிப்போவாச்சுது —வரு

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆண்டிமேலேண்டிநீ யடங்காமையல்கொண்டாய்
அயலார்பழிப்பா ரடி

அநுபல்லவி.

தாண்டிநடம்புரியுங் தற்பரமாணண்டி
தவத்தோர்நினைதில்லைக் காட்டில்வீற்றிருப்பாண்டி-ஆண்டி

சரணங்கள்.

வராஜன்புத்திரியை வாமத்திடுக்கினண்டி
வளருங்கங்கைப்பெண்ணை சிரத்திலொடிக்கினண்டி
தனையிற்காலனைவிழுத் தாக்கியுதைத்தாண்டி
தடுத்தமுயலகனைத் தயங்கமிதித்தாண்டி-ஆண்டி

அம்மான்கைக்கொண்டே அழலேந்திநின்றாண்டி
அரவாபரணம்பூண்டு ஆழிவிட்டாண்டாண்டி
செம்மான்மகளுக்குத் திகழ்மாமன்ஆனாண்டி
செல்விகலிநாயகன் சிரத்தைத்துணித்தாண்டி-ஆண்டி

ஈமத்தாடியென்ற ஈனசொற்கொண்டாண்டி
எதிர்த்தகரியதனை யுரித்துடைகொண்டாண்டி
காமன்றனையெரித்துக் கண்சிறிநின்றாண்டி
கபாலபாணியெனுங் கருணைப்பேர்கொண்டாண்டி-ஆண்டி

இராகம்-அடாணா-திரிபுடைதாளம்.

பல்லவி.

கூத்தாடியென்றறிந்தும் - மருந்தீசர்மேல்மோகம்
கொண்டதென்னடி மானே

அநுபல்லவி.

பார்த்தாகிலுமாசை திரளாமென்மெள்ளிலுல்
பயமுண்டாகுமேயல்லால் நயமுண்டாகுமோசொல்லாய்- கூத்

சரணங்கள்.

உட்லெங்கும்நாகங்கள் படமெடித்துக்கொண்டாடும்
விடமுண்டதுகண்டத்தில் இடமாய்க்கறுத்திருக்கும்- கூத்

பாய்புலியைக்கொன்றுதிரம் தோயுந்தோலையுடுக்கும்
பேய்கள்கூட்டமாக நேயமுடனிருக்கும்- கூத்

ஆனையைக்கொன்றுதோலைத்தானேபோர்த்துக்கொண்டாடும்
கானிலெலும்பையெல்லா மீனமில்லாமலேபூணும்- கூத்

மூக்கிப்போனசாம்பலே வெட்கமில்லாமல்பூசும்
பக்குவமாமன்பரை விக்கிடாமல்விழுங்கும்- கூத்

இராகம்-மாஞ்சி-சாபுதாளம்.

பல்லவி.

இவையிங்கேயேன்சேர்த்தாய் மகளே நீ - இவை

அநுபல்லவி.

எவரிடத்தும்பிச்சைவாங்கி ஏமாத்தும்ஆண்டியாச்சே
எத்துக்கள்எனென்றுசொல்லும் ஒற்றியூராண்டியாச்சே- இவ

சரணங்கள்.

மாதவத்தர்பத்தினிகள் மானங்கெடுத்தவராச்சே
சேதித்தப்பன்றியிறைச்சித் தின்றுகொழுத்தவராச்சே- இவ

வரகுணன்மனையாளை- வாயிற்போட்டுக்கொண்டவராச்சே
பெரியவர்போலேசென்று பிள்ளையைத்தின்றவராச்சே- இவ

மாம்பழம்படைத்தமாதை பேயாக்கும்வஞ்சகராச்சே
சாம்பலிப்பூசிக்கொண்டு சஞ்சரிக்கும்ஆண்டியாச்சே- இவ

கொண்டவளைப்பாதியாக்குங்- குணங்கெட்டபேயராச்சே
கண்டவர்பின்னுந்தம்மை காணவொட்டாமாயராச்சே- இவ

இராகம்-சாமா-சாபுதாளம்.

பல்லவி.

என்றுநான்காண்பேனோ எல்லாஞ்சிவமாய்—என்று

அநுபல்லவி.

மன்றுள்நடம்புரியும் ஆதிபுரித்தியாகேசர்
வரமருளிச்செய்யுஞ் திருவருள்நாட்டங்கொண்டு — என்று

சரணங்கள்.

காடென்றும் செடியென்றுங்
கல்லென்றும் முள்ளென்றும்
நாடென்றும் பதியென்றும்
நாடுநாட்ட மில்லாமல்—என்று

ஊனென்று உயிரென்றும்
உறவென்றும் பகையென்றும்
நானென்றும் நீயென்றும்
நாடுநாட்ட மில்லாமல்—என்று

சிரமமென்றுஞ் சுகமென்றும்
நீமையென்றும் நன்மையென்றும்
நரகமென்றுஞ் சொர்க்கமென்றும்
நாடுநாட்ட மில்லாமல்—என்று

வஞ்சமென்றும் மோசமென்றும்
மயக்கமென்றுந் தியக்கமென்றும்
நஞ்சமென்றும் அமுதமென்றும்
நாடுநாட்ட மில்லாமல்—என்று

இராகம்-துஜாவந்தி- தாளம்ரூபகம்.

பல்லவி.

இந்தப்பேச்சிலென்ன சாரம் கையா
லெடுத்துக்கொடுப்பதல்லோ வீரம்

அநுபல்லவி.

இந்தப்பேச்சும்பணப் பேச்சாயிருக்கவேண்டும்
எல்லாமுடையமருந்தீசரோ யில்லார்போற்பேசும்- இந்

சரணங்கள்.

கிளைத்தமுடியில்பண மிருக்குதே - எல்லாங்
கேட்குஞ்செவியில்பண மிருக்குதே
வளைத்தவிலலில்பண மிருக்குதே- அணிந்த
வாகுவலயத்தில்பணை மிருக்குதே— இந்த

அளக்கிச்சிலும்பண மிருக்குதே-பூண்டீ
ஆபரணத்திலும்பண மிருக்குதே
வளைபெண்விரலில்பண மிருக்குதே-காலில்
வரிந்தகழலில்பண மிருக்குதே— இந்த

கங்கணத்திற்பண் மிருக்குதே-லிக்கும்
கைத்தமருகத்தினு மிருக்குதே
எங்குமிப்படிபண மிருக்கவும்
ஏமாத்திவிட்டுப்போகும்-எண்ணங்கொண்டே [illegible]ந்த

இராகம்-எதுகுலகாம்போதி-சாபுதாளம்.

பல்லவி.

உமக்கும்எனக்கும் வெகுதூரம்
மருந்தீசரே - உமக்கும்.

அநுபல்லவி.

நமக்கென்னபோவென்றுகை நழுவவிட்டிருந்திப்
நங்கமில்லாமலேதோ பொங்கவந்தீரேபோம்மே [illegible]ம

சரணங்கள்.

ஏதாகிலுந்தோஷம் என்மேலிருந்தால்சொல்
இதுவரைக்குமிருந்த இடத்தினுக்கேசெல்
காதாலுள்ளேநுழைந்து கண்ணுல்வெளியேவ
காரூடவித்தையுடனே ஆரூட்வித்தையுங்க [illegible]ம

ஊரெல்லாமறியுமே அவள்பிழைப்பின்சேதி
உமக்குத்தெரிந்திருக்க லாகுமதிலேபாதி
ஆனென்னசொன்னலு மூமக்கேற்பதேயில்லை
அக்கக்காரிவீடே சொந்தமாகச்சேரும்- உம

பாதகியாயென்னைப் பரதவிக்கவிட்டீரே
பாடிகள்சொல்லும்பேச்சைக்கேட்டுக்குணங்கெட்டீரே
மாம்வைத்தவன் தண்ணீர்
வார்ப்பானென்றறி யீரே
வஞ்சகம்நீர் செய்தாலும்
பஞ்சமெனக்கொன்றுமில்லை (உமக்கும்)

இராகம்-ஆகிரி-சாபுதாளம்.

பல்லவி.

அவள்சமர்த்தல்லவோ சமர்த்து ஆ-ஆ
அவள்சமர்த்தல்லவோ சமர்த்து

அநுபல்லவி.

புவன்மெல்லாம்மயக்கு மனையுமேமயக்கும்
போதரூபவான்மியூர் நாதரையுமேமயக்கும் — அவ

சரணங்கள்.

நஞ்சினையுண்டுமயக்கம் கொஞ்சமுமில்லாதிருந்தீர்
பஞ்சனைவிட்டெழாமல் அஞ்சவேயுமைமயக்கும்-அவ

வேளூர்வயித்தியராய் நாளுமடியாளைவினை
மூளவிடாமலருளா லாளுமுமைமயக்கும்-அவ

வருந்தாபமயக்கம் பொருந்தாதன்டையாளும்
மருந்தீசராமுமைத்தன் மருந்தால்மிகமயக்கும்-அவ

கிளிப்பத்து.



இராகம் - உசேனி - சாபுதாளம்.

போதகமாமுகனைப்பெற்றவுத்தியூர்ப்
பொன்னினைக்கூவாமல் கிளியே

காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே

மாதொருபாகனைவுத்தியூரீசனை
வாவென்றுகூவாமல் கிளியே

காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே

மாதர்ப்பிறைக்கண்ணியானைத்திருவொற்றி
மைந்தனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
மூதறிவாளர்கள்போற்றியவொற்றியூர்
முத்தனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
மாதவன்வான்மீகமாமுனிபூசித்த
வாதனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
ஓதுசுயம்புவிலிங்கமாமொற்றியூர்
ஒளிதனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
வேதப்பரியுடையானைத்திருவொற்றி
வேந்தனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
நாதமுடிவில்நடித்திடுமொற்றியூர்
நாதனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணில்
கத்தாதே கிளியே
போதங்கடந்தவருக்கருளொற்றியூர்ப்
புனிதனைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே
வாதவூரண்ணலேயாண்டருளொற்றியூர்
வள்ளலைக்கூவாமல் கிளியே
காதுசெவிடுபடும்படிவீணிலே
கத்தாதே கிளியே

குயிற்பத்து

இராகம்-எதுகுலகாம்போதி சாபுதாளம்.

பேராணைமாமுகனைப்பெற்றஎற்றியூர்ப்
புனிதனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோரும்கத்தாதே குயிலே

ஓராறுமாமுகனைப்பெற்றஒற்றியூர்
ஒருவனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோறுங்கத்தாதே குயிலே

சீராருமொற்றியூர்வாழ்த்தியாகராசனைச்
சிந்தித்துக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோறுங்கத்தாதே குயிலே

பாராதியாம்பஞ்சபூதனைஒற்றியூர்ப்
பரமனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோருங்கத்தாதே குயிலே

கூரானபன்றியின்கோடனிஒற்றியூர்க்
கூத்தனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோறுங்கத்தாதே குயிலே

ஓராதாருள்ளத்தொளித்தருவொற்றியூர்
ஒருவனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோறுங்கத்தாதே குயிலே

ஏராருமாதிபுரியிலும்வாழ்தியாக
ராசனைக்கூவாமல் குயிலே

நாராசங்காதிலேபாய்சினற்போல்வினில்
நாள்தோறுங்கத்தாதே குயிலே

தீசாதரோயெல்லாந்தீர்த்தருளெற்றியூர்த்
தீர்த்தனைக்[illegible] குயிலே

நாராசங்காதிலேபாச்சினும்போல்வீணில்
நாள்தோறுங்கூ[illegible]தே குயிலே

வாரார்முலைவடிவாட்[illegible]வாழ்வினை
வாவென்றுகூவாமல் குயிலே

நாராசங்காதிலேபா[illegible]ற்போல்வீணில்
நாள்தோறுங்கூ[illegible]தே குயிலே

இராகம்-கேதாரா-சாபுதாளம்.

பல்லவி.

தந்தவாரோ தியாகரென்ற பேருமக்குத்
தந்தவாரோ.

கண்ணிகள்.

கற்றைக்கும் வழியில்லையே - இருந்தால்
கரித்தோற் போற்பதில்லையே
சந்தனப் பூச்சுமில்லையே - இருந்தால்
சாம்பற்பூசத் தேவையில்லையே—தந்த

பெருமையென்பது மில்லையே - இருந்தால்
பேய்களுடன் சேர்வதில்லையே
ஒருபொருளு மில்லையே - இருந்தால்
ஊரொற்றி யாவதில்லையே—தந்த

சுயாதீனமொன்றும் மில்லையே - இருந்தால்
சுடலையில் வாழ்வதில்லையே
தயாசமென்ப திலையே - இருந்தால்
சங்கரிக்குந் தொழிலில்லையே—தந்த

கஞ்சிக்குங் கெதியில்லையே - இருந்தால்
கையிலோடு தேவையில்லையே
கொஞ்சமு ஞானமில்லையே - இருந்தால்
கூத்தாடிப் பேரில்லையே—தந்த

ஆபரணமொன்று மில்லையே - இருந்தால்
ஆஸ்திகளைப் நில்லையே
ரூபமென்பது மில்லையே - இருந்தால்
உம்மைக்தாணை திதில்லையே—தந்த

கருணையென்பது மில்லையே - இருந்தால்
காலனையுதைப்ப நில்லையே
தருமுதார மில்லையே - இருந்தால்
சஞ்சலமெங்கட் கில்லையே—தந்த

சாந்தகுணமு மில்லையே - இருந்தால்
சந்திரனத்தேய்ப்பு நில்லையே
சாந்தாதிருத்த லில்லையே - இருந்தால்
காமனைக்காய்வ தில்லையே—தந்த

மூனியாதிருப்ப தில்லையே - இருந்தால்
மூப்புரம்வேவு தில்லையே
தனியாதிருப்ப தில்லையே - இருந்தால்
சங்கரிதேவை யில்லையே



சிவமயம்.

அடைக்கலம்.

இராகம் - பூகிரி- ஆதிதாளம்.

விருத்தம்.

சோதியாய்த்தோன்றிச் சுகமருளும்பரி சுத்தாவடைக்கலமே
ஆதியாயமரரடிபணிந்தேத்தும் அருளேயடைக்கலமே
நீதியாயன்பர்நிலைதனில்நின்ற நிமலாவடைக்கலமே
பூதியாம்பஞ்சாக்ஷரமதிற்குரியமெய்ப் பொருளேயடைக்கலமே. க

சோமனைத்தரித்தசுகிர்தமெய்ஞ்ஞானச் சுரூபாவடைக்கலமே
காமனைவெரித்தகருணைவாரிதியே கருத்தேயடைக்கலமே
பூமகள்நாதன்தேடியுமறியாப் புனிதாவடைக்கலமே
பாமகள்நாதன்சிரந்துணிசெய்த பரனேயடைக்கலமே. உ

இறையவனேஎமன்றனையுதைத்திட்ட ஈசாவடைக்கலமே
பொறையவனேசனகாதியர்க்கருளும் போதாவடைக்கலமே
மறையவனேஅறுபதுமூவாயிரும் வரதாவடைக்கலமே
பிறையவனேபாலகன்தனைப்புன்டருள்சிவ பெருமானடைக்கலமே. ங

ஆய்பனேயுமைமகிழானந்தத்தேனேயென் அன்பேபடைக்கலமே
நுய்யனேதுரியாதீதமாய்த்தோன்றுந் தூபாவடைக்கலமே
பொய்யாமறையின்காரணனேகிய புண்யாவடைக்கலமே
மெய்யனேமேலோர்விரும்பியமால் விடையானேயடைக்கலமே, ச

அல்லலைப்போக்கிமெய்யன்பரைக்காக்கும் அத்தாவடைக்கலமே
வல்லசித்தராய்த்திருவிளையாடல்செய் வாழ்வேயடைக்கலமே
எல்லாந்தானெங்குநிறைந்த யேகாவடைக்கலமே
சொல்லுமெந்தனைக்காத்தருள்செய்யும் துரையேயடைக்கலமே. ஞ

எ ச் ச ரி க் க.

இராகம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.

மதிசூடியபெருமான்றுள் மகமீனி யானைமுக்னே
கதியேயருள் கச்சிக்கதி பதியே எச்சரிக்கை.

காலன்றனையுதைத்தோனருள் காதர் உமைபங்தா
சோலங்திரு வானைக்கா வாழ் குருவே எச்சரிக்கை.

நால்வர்க்கருள்புரியுங்குரு நாதா சிவபோதா
மால்விதிதுதி யண்ணுமலை மருந்தே எச்சரிக்கை.

ஆண்டூர்தினந்தெர்ண்டுசெயும் ஆதி பரஞ்சோதி
கண்டாலினை யறங்காளத்திக் காசே எச்சரிக்கை.

அன்பாய்த்தவர்நாடுங்திரு அருளே மறைப்பொருளே
தென்னூர்சிதம் பரத்திலாடுங் தேவா எச்சரிக்கை.

மங்களம்.

இராகம்-சௌராஷ்டிரம்-சாபுதாளம்

பல்லவி.

ஆதிபுரீசருக்கு மங்களம் எங்கள்
அய்யர்தியாகராஜருக்கு மங்களம்

அநுபல்லவி.

சோதிபிரகாசருக்குச் சுந்திரமூர்த்திநேசருக்குப்
பூதியணிதேசருக்குப் பூரணவிலாசருக்கு

ஆதிபுரீ

சரணங்கள்.

திருவொற்றியூருக்குச் செம்பொற்கொன்றைத்தார்ருக்கு
நரிபரிசெய்வீரருக்கு நாதாந்தசீலருக்கு

ஆதிபுரீ

வடிவம்மைமணாளருக்கு மதனைவெல்கண்ணாளருக்கு
அடியார்க்கருள்தாளருக்கு அழியாதபல்நாளருக்கு

ஆதிபுரீ

சிந்தூரமுரித்தவர்க்குத் திரிபுரமெரித்தவர்க்குச்
சந்திரனைத்தரித்தவர்க்குச் சாஸ்திரந்தெரிந்தவர்க்கு

ஆதிபுரீ

அத்திமரத்தருக்கு அருள்செய்யும்பாதருக்குத்
தத்துவமான்கரத்தருக்குத் தளமதிச்சிரத்தருக்கு

ஆதிபுரீ

சிவநாமகீர்த்தனங்கள்

முற்றிற்றும்.